www.padippakam.com

12/5-92

# கடல்

## சமுதாய சஞ்சிகை

அலை பதின்மூன்று
சித்திரை ' 1992



படிப்பகம்

**கடல்**

கடல் ஆக்கதாரர்களின் கருத்துகளுக்கு பூரண சுதந்திரம் அளிக்கிறது.கருத்து மோதல்களுக்கு கடல் களமாக விரும்புகிறது.

ஆசிரியர் குழு:
சுழியோடிகள்

## பேசாதீர்கள் செயல்படுங்கள்;

## அறிவிக்காதீர்கள் செய்து காட்டுங்கள்

பூகம்பம் - ஒரு அனுபவம்




பக்கம் 33

www.padippakam.com

# பூத்தது புத்தாண்டு
## -விடிவு.....

புத்தாண்டு பூத்தது
சித்திரையில் முத்திரையாய்

அகாலங்களும் அரைவயிறுகளும்
அட்டகாசமாய் அவஸ்தைப்பட
பிரலாபங்களும் பித்தலாட்டங்களும்
பிறையாக வளர்ந்து வர

புத்தாண்டு பூத்தது
சித்திரையில் முத்திரையாய்

கைவியளங்களும் எருப்போடவும்
கைங்கரியமாய் எங்களுக்குள்
பொய்வியளங்களும் பொசுக்கனைகளும்
பொங்குகின்ற காலமிதில்

புத்தாண்டு பூத்தது
சித்திரையில் முத்திரையாய்.



படிப்பகம்

www.padippakam.com


**பிறந்த நாள் இன்று பிறந்த நாள்**

என்னடியப்பா இப்பதானே கிட்டடியிலை பிறந்தநாள் கொண்டாடினியள். அதுக்குள்ளை இதென்ன?

—ஆனந்தி..........பக்.04

**விளையாட்டு**

இவ்வருட உதைபந்தாட்டங்களை எந்தத் தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்புவதென்று தொலைக்காட்சி நிறுவனங்களிடையே பரபரப்பு உண்டாகியுள்ளது.

—கே.கே..............பக்.06

**அம்மா தாயே**

வறுமையின் நிறம் சிகப்பு என்றால் தியாகத்தின் நிறம் என்ன?

—சூரிச் சிசியா...........பக்.08

**மாற்றம்**

ரவிக்கு தேவனின் அருமை புரியவில்லை என்பது சிவாவின் எண்ணம். சிவா எப்போது திருந்துவாள் என்பது ரவியின் எதிர்பார்ப்பு.

—மாவையூர் மனோகரன்....பக்.09




படிப்பகம்

www.padippakam.com

மன்னன்

பெண்விடுதலை என்றால் நாங்கள் ஒவ்வொருவரும் எங்கடை விருப்பங்களுக்கேற்ப வியாக்கியானம் பண்ணிச் சொன்னமாதிரித்தான் இந்தப் படமும்.

—ஈஸ்வரன்................பக். 12

முத்தாரம்

சந்திப்பு. இது எப்படி இருக்கு பகுதிகள் உனக்கு வாசிக்கப் பிடிக்காவிட்டால் விட்டுவிடு. புத்திஜீவியின் பதில்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாசகர்களைத் தெரியாதா உமக்கு.

—என். ரவி..............பக்..15

அதிமேதாவியின் அவசரக் குறிப்புகள்

நானும் சரி, நீயும் சரி, இனம் பிற புத்திஜீவிக் குஞ்சுகளும் சரி, நாட்டுக்குத் திரும்பிப் போகத் தயாரா?

— ராமசாமி............பக். 24

சந்திப்பு

ஒரு நாளைக்கு இலங்கைக்குப் போக வேண்டி வந்தால்... சிங்களந்தான் தெரியாது. அதிலேயும் அளிப்புல் மேய்ந்தமாதிரி சிலதைத் தெரிந்து வைத்திருந்தால் ஏன் தோன்றவில்லை.

—சோழியான்..........பக். 36



படிப்பகம்

# பிறந்தநாள் இன்று பிறந்தநாள்

- ஆனந்த் -



ஒருவர்: இதென்ன கேக்கிலை ஒரே மெழுகாய் இருக்கு?

மற்றவர்: நாற்பது மெழுகுதிரியைக் கொளுத்திக் கேக்
வெட்டினால் கேக்கிலை மெழுகாய்தானே இருக்கும்

*** ***



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

ஒருவர்: என்ன உந்தாள் கிவ்விட்டுச் சங்கிலியைத்தான் பிரசென்ற்
பண்ணுவேன் என்டு ஒத்தைக்காலில நிக்கிறான்?

மற்றவர்: கேக்கே ஒறிஜினல் இல்லையாம். ரெஜிபோம் கேக்காம். பிரசென்டை எப்படி ஒறிஜினலாகக் கொடுக்கலாம் எண்டு கேக்கிறார் போலிருக்கு



ஒருத்தி: என்னடியப்பா இப்பதானே கிட்டடியிலை பிறந்த நாள் கொண்டாடினீயள். அதுக்குள்ள இதென்ன??

மற்றவள்: அது இங்கிலீசுக்கு இது தமிழுக்கு என்ன இருந்தாலும்
தமிழையும் விடக்கூடாதெல்லே!!

ஒருவர்: என்ன ஒருத்தரும் பிரசென்ட் கொடுக்காமை ஆளை ஆள் பாத்துக் கொண்டு நிக்கினம்?

மற்றவர் : தங்கச் சங்கிலி போடுகிறவர் தானாம் முதலில் வர வேண்டுமென்று ஓடர் போட்டிருக்காம்.

www.padippakam.com



ஒருவர்: என்ன கேக் வெட்டாமல் முழிக்கிறியள்??

மற்றவர்: எது றெஜிபோம்கேக் எது உண்மையான கேக் எண்டு தெரியல்லை

*** ***

# விளையாட்டு

தொகுப்பு : கே.கே....

சென்ற தொகுப்பில் Bodo Illgner என்ற பந்து பாதுகாப்பாளர் Fortuna köln ஐச் சேர்ந்தவர் என தவறுதலாக எழுதியதற்கு வருந்துகிறேன். இவர் 1. FC köln உதைபந்தாட்ட விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்.

— — —

பயர் லிவர்கூசனைச் சேர்ந்த பிரேசில் நாட்டவரான Jorginho என்ற உதைபந்தாட்ட வீரரின் ஒப்பந்த காலம் சித்திரை முதலாம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. இவர் தொடர்ந்து விளையாட பயர் லிவர்கூசன் கழகம் வருடம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் மார்க் தருவதாகக் கூறியும் மறுத்துவிட்டார். இவருக்கு 1'.4 மில்லியன் மார்க் கொடுக்க பயர்ன் முன்சன் தயாராக உள்ளது. இவர் இனி எக்குழுவிற்காக விளையாடப் போகிறார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

— — —



படிப்பகம்

www.padippakam.com

வேர்டர் பிரிமனில் மத்திய நிலையில் விளையாடுபவரான Dieter Eilts இறுதியாக Galatasaray Istanbul உடன் விளையாடிய பந்தயத்தின்போது மைதானத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட பின்பு, இரு சர்வதேச விளையாட்டுகளில் பங்குபற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

---

இவ்வருட உதைபந்தாட்டங்களை எந்த தொலைக்காட்சி அலை வரிசையில் ஒளிபரப்புவதென்று தொலைக்காட்சி நிறுவனங்களுக்கிடையே பரபரப்பு உண்டாகியுள்ளது. ஐ.எஸ்.பி.ஆர். என்ற நிறுவனம் ஐந்து வருடங்களுக்கு விளையாட்டுகளைப் படம் பிடித்து, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு கெ கொடுக்க, 700 மில்லியன் மார்க் தருவதாக ஜேர்மன் உதைபந்தாட்ட சபையுடன் ஒப்பந்தம் செய்ய முற்படுகிறது. ஆனால் ஜேர்மன் உதைபந்தாட்ட சபை இதைவிட அதிகமாக எதிர்பார்க்கிறது.

---

ஓட்ட வீராங்கனையான Katrin Krabbe யின் வழக்கில் ஆதாரங்கள் குறைவாக உள்ளதால், இவர் நிச்சயமாக வரவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடுவார் என உறுதியளிக்கிறார் இவரது வக்கீலான Dr. Rheinhard Rauball.

---

மல்யுத்த (Wrestling) நட்சத்திரமான Hulk Hogan என்று அழைக்கபடும் Terry Bollea அமெரிக்காவிலேயே மிகவும் பிரபலமானவர். அமெரிக்காவில் இவரது பெயரிலே விட்டமின் மாத்திரை தொடக்கம் உடுப்புகள் வரை 300க்கும் மேற்பட்ட பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தற்போது, இவர் Anabolika (உடம்பை வலிமைப்படுத்தும் மருந்து) மாத்திரைகள் பாவித்ததாக இவர்மீது வழக்குப் பதிவாகியுள்ளதுடன், போதை மருந்து பாவிப்பதாகவும் பல புகார்கள்.

---

மல்யுத்தத்(Wrestling)தில் போதை மருந்து உபயோகிப்பது சகஜம் என்கிறார் WWF ன் உரிமையாளரான Vince McMahon. எனினும் கார்த்திகை 1991ல் 50%ற்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் போதை மருந்து சோதனையில் பிடிபட்டும், 15வீதமான வீரர்களே போதை மருந்து பாவிப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார் Vince Mc Mahon.



படிப்பகம்

# அம்மா தாயே

-குரிச் சிசியா-

குரு ஊமை என்பதால்
செவிடர்களுக்கே
சீடர் ஆகும்
தகுதி உண்டு!

இன்று ஈழக்
கலைமன்றம்
நடாத்தும்
தாயே உனக்காக
நாடகத்தில்
புரட்சித் தலைவர்
இரட்டை வேடம்
போடுகின்றார்
குருடர்களே
முந்திக் கொள்ளுங்கள்

கறிக்கடையைப் பார்த்து
ஐயோ பாவம்
என்ற தமிழன்
இன்று பிண
மேடையில் ஏறி
நின்று புரட்சிக்
கீதம் பாடுகின்றான்

ஈழத்தில் தீவிர
தேடுதல் வேட்டை
நடக்கிறது
அழிந்துவிட்ட
சுதந்திரத்தைத்
தேடித்தான்

வறுமையின் நிறம்
சிவப்பு என்றால்
தியாகத்தின் நிறம் என்ன?
இதனால் தான்
எம் நாட்டில்
செம்மண் இருக்கிறதோ?

நாம் எல்லோரும்
இனிமேல் ஆண்டிகள் தான்
போதியளவு மண்டையோடுகள்
கிடைத்துவிட்டன.



# மாற்றம்

-காரையூர் மனோகரன்-

பாக்கியம் பெருமூச்செறிந்தாள்.

அவள் வாழ்வில் வாழ்வதற்காக ஏதாவதொரு துரும்பு கிடைக்கும், கிடைக்கும் என்று எதிர்பார்த்து எல்லாமே ஏமாற்றங்களாகிவிட்டன.

'இனி எப்படி வாழப் போகிறோம் என்ற கேள்வியே திரும்பத் திரும்ப அவளின் மனதில்....

ஒரே மகன் சிவா... மகள் தமயந்தி. இந்திய இராணுவத்தின் நிதான மற்ற துப்பாக்கி வேட்டுக்கு கணவனை பறி கொடுத்தும், பிள்ளைகளுக்காக என்ற ஆறுதலில் காலத்தை ஓட்டியவளி இன்று மீதிக் காலத்தை எப்படிக் கழிப்பது என்ற புரியாத புதிரில்.....

'அப்பு ராசா, இதுகளுக்காலை ஓடித் தப்படா' என்று அக்கம் பக்கத்தில் உருட்டிப் பிரட்டி சிவாவை ஜேர்மனிக்கு அனுப்பி வருடங்கள் இரண்டிற்கு மேலாகிவிட்டன.

'பொடியன் போய்விட்டான். சீவியத்துக்கு ஏதாலும் அனுப்புவான்தானே?' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்தி, சாப்பாட்டிற்காகக் கடன் பட்டுக் கடன் பட்டு, சமாதானங்கள் யாவுமே சமாதிகளாகிய நிலையில் பாக்கியம்.

கடந்த ஒரு வருடமாக சிவாவிடமிருந்து எவ்வித கடிதமும் இல்லை.

தமயந்திக்கும் வயதாகிக் கொண்டே போகிறது. அவளையும் திருமணக்கோலத்தில் பார்க்கலாம் என்றால்.... சாப்பாட்டிற்கே வழியைக் காணவில்

லை.....

நம்பியவன் கை கழுவி விட்டானே?

சிவாவைப்பற்றி எவரிடம் விசாரிப்பது என்றும் புரியவில்லை. கொழும்புக்குப் போவோரிடம் ஜேர்மனிக்கு அனுப்புமாறு கொடுத்துவிட்ட கடிதங்களுக்கு எவ்வித பதிலும் இல்லை.

ஜேர்மனிக்குப் போன புதிதில் எவ்வளவு ஆசையாக, அன்பாக கடிதமெழுதினான் சிவா.

'அம்மா! நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். உங்களையும் தங்கச்சியையும் கண்கலங்காமல் கவனிப்பது என்னுடைய கடமை.....'

போய் ஒரு வருடமாக கஷ்டப்பட்டு உழைத்தான்; அனுப்பினான். விலைவாசி தெரியவில்லை. சிவா தொடர்ந்து அனுப்புவான்தானே என்ற எதிர்பார்ப்பில் சிக்கனமாக வாழத் தோன்றவில்லை.

ஆனால் தற்போது சிவாவிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்காத நிலையில் எவ்வளவு காலம்தான் அக்கம் பக்கத்திடம் உதவி கேட்பது? ஒவ்வொரு தடவையும் 'கடன்' என்று கேட்கும்போது உடலும், உள்ளமும் கூனிக் குறுகி ஏதோ குற்றவாளியைப் போலல்லவா நடக்க வேண்டியுள்ளது?!

இவ்வளவு காலமும் வாங்கிய கடனையே எவ்வாறு மீளச் செலுத்துவது எனப் புரியவில்லை.

பாக்கியத்துக்கு தன்னைப்பற்றி கவலை இல்லை. எல்லாவற்றையும் வாழ்ந்தாகி

குறுக்கெழுத்துப் போட்டி

இல: 9 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ம | லை | 3 ய | 4 க | 5 ம் |
| சீ | றீ | ல | ங் | 10 கா |
| 11 ப | 12 ல் | 13 ண் | கா | 15 ளி |
| 16 தொ | ழி | 18 ல் | 19 ளி | ர |
| ண் | 22 மா | 23 த | 24 பூ | 25 சா |
| ட | த் | 28 ரா | 29 லை | 30 உ |
| மா | த | மை | 34 மா | 35 றி |
| 36 ன் | 37 ளை | 38 யா | 39 சு | 40 மை |

தயாரிப்பு: 'ஜீவன்'
4000 குசில்டோர்ஃ

பரிசுக்குரிய அதிஷ்டசாலி

திருமதி. அகல்யா குகன்

4300 எசன்.

இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

www.padippakam.com

விட்டதென்ற திருப்தி. ஆனால் பாவம் தமயந்தியின் கெதி... அவளின் வாழ்வில் ஒரு விடியலைத் தோற்றலாமென்றால், அதற்கு ஒர் சுரும்பாவது கிடைக்குமா என்பதே கேள்விக் குறியாகிவிட்டது

இந்தக் கேள்வியின் விடையான சிவாவின் நிலை என்ன......?

மேசையில் ஒரு கறுத்த மட்டைப் புத்தகத்தில் மூழ்கியிருந்த சிவாவை உலுக்கினான் ரவி.

''டேய்... உனக்கென்னடா பைத்தியமா பிடித்துவிட்டது? எப்ப பார்த்தாலும் உந்தப் புத்தகத்தையே படித்துக் கொண்டு... வெளியிலை போய் நாலு காசு சம்பாதிச்சு குடும்பத்தைக் கவனிப்பதை விட்டுவிட்டு, அப்படி என்னதான் உதிலை ஆராய்ச்சி..." என்று கேட்டவனை புன்முறுவலுடன் நோக்கினான் சிவா.

"பிறதர்... உமக்கு இதன் அருமை தெரியாததால் இப்படி சொல்லுறீர்... .. இது சாதாரண புத்தகமில்லை... தேவனால் அருளப்பட்ட வேதாகமம். ஒருவன் மனிதனாக வாழ இதைப் படிக்க வேணும். கர்த்தர் கூறுகிறார்..... நானே சத்தியமும்..."

"போதும் போதும். எனக்கிப்ப உன்னுடைய அறிவுரை தேவையில்லை. முதலில் நாங்கள் உண்மையுள்ளவர்களானால் போதும்... இந்தா... உனது அம்மாவின் கடிதம்... பாவம் மனுசி அங்கை என்ன கஷ்டப்படுகுதோ ... இந்தக் கடிதத்துக்காவது பதில் போடு.. பைபிள் படிப்பது தப்பில்லை. அதன்படி வாழுவது தப்பில்லை. ஆனால் வேலை எதுவும் செய்யாமல், தன்னுடைய குடும்பத்தைக் கவனியாமல், மற்ற மதங்களை குறை கூறிக் கொண்டு, எந்த நேரமும் பைபிளும் கையுமாக இருப்பதுதான் தப்பு..."

"பிறதர்... உமக்கு இதைப்பற்றித் தெரியேலை...."

"என்ன தெரியேலை... அங்கை உன்ரை அம்மாவும் சகோதரியும் பசியோடை இருக்கிறதுதான் சரியாய்ப் படுகிறதா? அதுகள் எவ்வளவு நம்பிக்கையோடை உன்னை இங்கை அனுப்பிச்சுதுகள். ஆனால் நீ... மனசிலை கொஞ்சம்கூட ஈவிரக்கம் இல்லாமை அதுகளை மறந்து இந்தப் புத்தகத்தில் உன்ரை வாழ்க்கையையே வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்... "என்று சினத்துடன் கூறினான் ரவி.

ரவிக்கு தேவனின் அருமை புரியவில்லை என்பது சிவாவின் எண்ணம்.. சிவா எப்போது திருந்துவான் என்பது ரவியின் எதிர்பார்ப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் ஒன்பதில், இருபதுக்கும் மேற்பட்ட வாசகர்கள் சரியான விடைகளை அனுப்பியுள்ளார்கள். இட நெருக்கடி காரணமாக எல்லா வாசகர்களுடைய பெயர்களையும் பிரசுரிக்க முடியவில்லை. ஆர்வத்துடன் கலந்துகொண்ட யாபேருக்கும் எமது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.



படிப்பகம்

# மன்னன் (விமர்சனம்)

- ஏ.ஸ்வரன் -

''தளபதியாக இருந்த ரஜினிக்குப் புறமோசன் கிடைத்து விட்டதாமே'என்று சொல்லிக் கொண்டு நீலா கதவைத் திறந்து கொண்டு வந்தாள். இவளுடைய பேச்சில் பொடி இருக்கும் என்பதை அறிந்து கொண்ட மாலா ''எந்நாளும் தளபதியாக இருக்க முடியுமா? தேசியத் தலைவராக வேண்டியதுதானே!'' என்று சொன்னாள்.

நீ எங்கேயோ போகின்றாய்! எனக்கு இது கோபத்தை உண்டாக்கவில்லை. ஆனால் என்னைக் கிளறுவது போல இருக்கிறது'' நீலா தொடர்ந்தாள். 'இதிலை என்ன கிளறுவது? தளபதி அரசனாக அரசன் பேரரசனாக ஆவதில்லையா?' என்றாள் மாலா. ''பைத்தியம். பைத்தியம். நான் தளபதியாக நடிச்ச ரஜினி இப்ப மன்னனாக நடிச்சதைச் சொல்ல வந்தேன். நீ ஏதேதோ பேசுகின்றாயே??''

'அப்படி வா வழிக்கு! நானும் மன்னன் படம் பார்த்தேன். அதைப்பற்றி உன்னுடன் கதைக்க வேண்டுமென்று தான் ரெலிபோன் அடிச்சுக் கூப்பிட்டேன். இதைப் பற்றி ரெலி போனிலே கதைச்சிருக்கலாமே? என்று மட்டும் கேட்காதே! இப்படியான சமாச்சாரங்களை நேரில்தான் கதைக்க வேண்டும்'' நீலா தொடக்கினாள். ''இந்தப் படத்திலை ரஜினிக்குக் கோடிக்கு மேலே தாண்டி விட்டதாம். எம்.ஜி.ஆரை விடக்கூடிய செல்வாக்கும் வளர்ந்து கொண்டிருக்கிற நேரத்தில இந்தப் படம் வந்திருக்கு'' என்றாள் நீலா.

''செல்வாக்கிற்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?'' மாலா கேட்டாள்.''அப்படிச் சொல்லாதே! கமலுக்கு எவ்வளவு தான் திறமை இருந்தும் வாணியை விட்டதால் விழுந்த செல்வாக்கினால் கமலுடைய படங்கள் அவ்வளவுக்கு எழும்பவில்லை. எம்.ஜீ.ஆரின் படங்கள் கொடிகட்டிப் பறந்ததற்கும் ரஜினியின் படங்கள் கொடிகட்டிப் பறப்பதையும் மனதில் கொள்ளவேண்டும். இந்தியாவின் ரசனை அப்படி' மாலா விளக்கம் சொன்னாள்.

''எனக்கு இந்த விவரணங்கள் தேவையில்லை. மன்னன் படம் எப்படி? ஏதாவது சமுதாயத்திற்குப் பயன் படுகிற விடயங்கள் இருக்கிறதா? மன்னன் படத்தைப் பற்றி

உன்னுடைய அபிப்பிராயம் என்ன? இதெல்லாவற்றையும் வைத்துக் கடலுக்கு இந்த முறை விமர்சனம் எழுதப் போகின்றேன்''நீலா விடயத்திற்குள் விரைந்தாள். ''அப்படிச் சொல்லு சோழியன் குடுமி சும்மா ஆடுமா?''இது மாலாவின் நக்கல். ''சரி ஆடுது சொல்லேன்'' ''படத்திலை வாற வசனங்களைப் பற்றி ஒண்டும் கேட்காதே! இந்த விசிலடிச்சான் குஞ்சுகளாலை அதொண்டும் விளங்கல்லை'' ''இஞ்சையும் விசிலடிக்கிறான்களோ'' ''இதுகள் எங்கை போனாலும் தங்கடை கழிசற வேலையை விடாதுகள் இது தான் தமிழனின் ஸ்பெசாலிட்டி''

''படத்திலை பெண்விடுதலைக்கு நல்ல இடம் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள் உண்மையா''

''இந்தியாக்காரன்ர விளையாட்டுத் தெரியுந்தானே? முன்னுக்கு அப்பிடி இப்படி எண்டு கொண்டு வந்திட்டுக் கடைசியில தலையடி அடிச்சு நசிக்கிவிடுவான்''

''நீ சொல்வறதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்குது''

''இந்தியாவின்ர தன்மைக்கு மாறாத படம். அப்படியின்ன இந்தியாவின்ர தன்மையை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.''

''பெண்விடுதைல என்றால் நாங்கள் ஒவ்வொருத்தரும் எங்களுடைய விருப்பங்களுக்கேற்ப வியாக்கியானம் பண்ணிக் கொள்ற மாதிரித் தான் இந்தப் படமும்''

''அப்படியெண்டா?? இதில பெண்விடுதலை பற்றி ஏதுமில்லையா?''

''யார் சொன்னார்கள்? பெண்விடுதலை என்றால் ஆண் மீது வெறித்தனமான ஆதிக்கம் செலுத்துவதுதான் என்று இந்தியன் ஒரு தலையடி போட்டிருக்கானே போதாதா?''

''நல்லாச் சொன்னாயடி இப்படியான வியாக்கியானங்கள் பெண் விடுதலை போல தோற்றம் காட்டி அதை நசுக்குகிற வேலை தான்''

''எங்கடை பெண்டுகளும் இது போல பியர் குடிப்பது கூத்தடிப்பது விரும்பியவனுடன் தங்குவது என்று பெண் விடுதலையைக் கொச்சைப் படுத்தவில்லையா? இது போலத் தான் மன்னன் படத்தில காட்டுற பெண்விடுதலையும்''

''படத்தில ரஜினிக்குப் போட்டியாக விஜய சாந்தி நடிச்சிருகிறாளாமே உண்மையா?''

''அதை மறுக்க முடியாது. படத்தில நடிப்பு செலவுகள் உச்சத்தில இருக்கு. பாட்டுகள் பரவாயில்லை. அம்மா பாட்டின் மூலம் ஜேசுதாஸ் இளையராஜாவைக் காப்பாற்றி இருக்கின்றார். காலாகாலமாக நினைவில் நிற்கக் கூடிய

www.padippakam.com

## நான் கண்ட ஜேர்மனி

-சோழியபுரத்தும் கண்ணன்-

திருமணங்கள் டிஸ்க்கோவில்
தீர்மானிக்கப் படுகின்றன.
மூடநம்பிக்கை இல்லாமல்
விஞ்ஞானத்தை வளர்ப்பவர்கள்
பேய்களை ஏவாமல்
ஏவுகணைகளை ஏவுகின்றார்கள்
பசி வஞ்சம் சாதி மதச் சண்டைகள்
மறந்து உல்லாசத்தில் உள்ளதையும்
மறக் கின்றார்கள்
மாடிகளில் கார் ஊர்வலங்கள்
பொறாமையில்லாமல்
பொருளாதாரத்தை
பெருக்குகின்றார்கள்.
வரதட்சனை கிடையாது
சமவுரிமை உண்டு
பாசத்தை அறியாதவர் பலர்
வாழ்க்கையை வெறுத்துப்
போதைவஸ்த்துவுக்குள்
போனவர் சிலர்
குழந்தையிருந்தும் திருமணம்
ஆகாத பெண்கள்
விதவைகள் அரிது
விவாகரத்தோ அதிகம்
கருக்கலைப்புக் கைவந்த கலை
உருப்படியாச் சொல்வதற்கு
உங்களிடம் கேட்கின்றேன்.

இந்தப் பாட்டிற்காக வாலிக்கும் ஜேசுதாஸிற்கும் ஒரு சபாஷ் போடலாம்''

''தளபதியை விட உசத்தி என்று பேசுகின்றார்களே உண்மையா?''

''தளபதியின்ர ரைப் ஒரு மாதிரி.ரஜினியின் படங்களில் கமேடி இல்லாத சோகப்படம் அது. இதில ரஜினியோட கவுண்ட மணியும் இருக்கு.சிவாஜி புரொடொக்சனுக்கு நல்லாயப் பணம் பண்ணத் தெரிஞ்சிருக்கு. வாசு அதுக்கு வகை பண்ணி இருக்கின்றார்''

''மனசில நிக்கிறதாக ஏதாவது இருக்கா''

''இல்லாமலா? ரஜினியின் முதல் சண்டைக் காட்சியில் இனி எல்லோரும் சுத்துவீங்களே என்றதும் வில்லன் கூட்டம் சுத்துவது. அம்மா பாட்டு கடைசித் தீப்பற்றியெரியும் காட்சி என்று பட்டியலை நீட்டிக்க இடமிருக்கு.''

''ரஜினியின் படங்களுக்கு மூன்று வயதுப் பிள்ளைகளிலிருந்து விசிறிகள் இருக்கின்றதற்குக் காரணம் ரஜினியும் அதன் ஸ்டைலுந்தான்''

எயார்த்துத்தில வழமையயான வியாபாரப் படம் என்றுதான் சொல்லலாம். வியாபார யுத்திக்காகவே பல காட்சிகளைத் திணித்திருக்கின்றார்கள். செலவும் விற்பனையும் போட்டி போடுகென்றால் பாரேன் இந்தியத் தமிழப் படங்களை.



படிப்பகம்

www.padippakam.com

# முத்தான முத்தாரம்

'கடல்' ஆசிரியர் குழுவினருக்கு!

'மதம் மாறுவது' பற்றி சுகந்தன் எழுதிய ஆக்கத்தைப் பார்த்தேன். உண்மையான ஈடுபாட்டில் சிலர் மதம் மாறுவதை குற்றம் கூற முடியாது. ஆனால் பலர் சில அற்ப சலுகைகளுக்காகவும், தமது பிறப்பு மதத்தைப் புரிந்து கொள்ளாததாலுமே மதம் மாறுவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

எல்லாச் சமயங்களும் மனிதனை நெறிப்படுத்துவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளன. எனவே எவர் எந்த சமயத்தில் இருந்தாலும், மாறினாலும்; அவர் நல்வழியில் செல்லும் நேர்மையானவராக இருப்பின் அது வரவேற்கத்தக்கதே. மனிதன் எப்படியும் வாழலாம் என்பதை விட இப்படித்தான் வாழ வேண்டும் என நினைப்பதில் தப்பே இல்லை.

ஆனால், ஜேர்மனியில் பல தமிழர்கள் ஜேர்மன்காரரின் உதவியோ, நட்போ, அன்மையோ கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலும்; தமது இந்த நிலைக்கு தமது பிறப்புச் சமயக் கடவுள்களே காரணமென்ற தெளிவின்மையுமே இப்படியான வேற்று மதச் சபைகளை நாடுவதற்குக் காரணம். அதுவும் வாழ்வில் நிம்மதியற்று இடமில்லா மனதுடன் நிதானம் இல்லாமல் உள்ளவர்கள் இத்தகைய சமய சபைகளின் பிரச்சாரங்களினால் சிந்திக்கும் அறிவை இழக்கிறார்கள். ஈற்றில் வெளியுலக நடமாட்டத்தைப் படிப்படியாகக் குறைத்து, பைபிளும் கையுமாக அறைகளுள் முடங்கி, மன நோயாளர்களாக மாறுகிறார்கள். இன்று ஜேர்மனியின் பல பாகங்களில் எமது இளைஞர்களும், குடும்பஸ்தர்களும் பைபிளால் மனநோய் பிடித்தவர்களாய்; கிறீஸ்தவ விடுதிகளிலும், மனநோய் ஆஸ்பத்திரிகளிலும் உள்ளதைக் காணலாம்.

பைபிள் வாசிக்கக் கூடாதென்று கூறவில்லை. ஆனால், பைபிளே விசராவதற்கு காரணமாக இருக்கக் கூடாதென்று கூறுகிறேன்.

சுகந்தன் தனது ஆக்கத்தில் 'மதம் மாறுதலை' சில எளிமையான உதாரணங்களுடன் விளக்கியுள்ளார். எனினும் அவர் ஒரு பக்கச் சார்பாகவே எழுதியுள்ளார்.

மனிதனுக்கு முதலில் தனது காலில் நிற்க வேலை முக்கியம். அதன் பின்னர்



படிப்பகம்

தான் ஏனையவை. வேலை எதுவும் செய்யாமல், சோசல் காசில் இருந்து கொண்டு பையிலும் கையுமாக வேறு சிந்தனை அற்றிருப்பதாலேயே பலர் இன்று சுய அறிவு அற்றவர்களாக உள்ளார்கள்.

பிறமன் போன்ற மாநிலங்களில் மதம் மாறியோர் தொகை மிக அதிகம். அவசரத்தில் முன்பின் சிந்திக்காமல் மதம் மாறிய நம்மவர் குடும்பங்களில் நாளாக நாளாக அடிதடிகளும், விவாகரத்துக்களும் அதிகரித்து வருவதையும் அங்கே காணலாம்.

முதலில் சொந்த மதத்தை விளங்கிக் கொள்ள முயலுங்கள். பின்னர் மாற்று மதத்தை சரியா எனப் பார்க்கலாம்.

— அன்புடன்,
விபுலானந்தன்,
4000 டிஸ்ல்டோவ்.

---

சுகந்தனின் கருத்துக்கள் பல கிறிஸ்தவ தமிழரின் மனங்களைப் புண்படுத்திவிட்டது. தயவு செய்து இப்படியான ஆக்கங்களைப் பிரசுரித்து, தங்களை இந்து மத வெறியராக்கிக் கொள்ள வேண்டாம்.

—சி. சிவரூபன்,
5000 கேல்ன் 30.

---

(Bayer)
பயர்–04 லிவகூசன் ஜேர்மனிய உதைபந்தாட்ட விளையாட்டு குழுவினர்களால் கைன்ஸ்பேர்க் என்னும் இடத்தில் ஈழத்தில் அல்லல் உறும் அநாதைச் சிறுவர்களுக்காக ஜேர்மனிய கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து, 3841 டீ.எம் சேகரித்து, சமூக சேவகி யோசபீன் ஜான்சன் அவர்களிடம் ஒப்படைத்து, சிறுவர் அனாதை இல்லத்திற்கு ஓர் பெரும் உதவி செய்தது பாராட்டக்கூடிய பெரும் விடயம். இது போன்ற நிகழ்ச்சிகளை வெளிநாட்டு மக்கள் எம் இன மக்களுக்காக செய்யும்போது, தமிழ் லிவகூசன் விளையாட்டுக் குழுவினர்களால் சென்ற வருடம் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவும்–கலை நிகழ்ச்சிகளின் போது சேகரித்துக் கொடுக்கப்பட்ட பண உதவிகளை தவறு என்று பல மேதாவிகள் எழுதித்தள்ளுகிறார்கள்... நண்பரே! நீங்களும் சற்று பொறுமையாக யோசித்துப் பாருங்கள்.

–கா. ஜெயா,
5090 லிவகூசன் 1.

( லிவகூசன் கலைவிழாவில் பணம் சேகரித்ததை குறை கூறவில்லை. சேகரிக்கப்பட்ட முறையைத்தான் தப்பு என்றோம்.

1. ஆயிரக்கணக்காக செலவழிக்கப்பட்ட விழாவில் சில நூறுகள் அகதிக்காக சேகரிக்கப்பட்டது என்ன நியாயம்?
2. லொத்தரென்றால்தானா அகதிக்காக பணம் சேகரிக்க முடியும்? அதுவும் இரண்டு மார்க் கொடுக்க, அதிர்ஷ்ட பரிசை எதிர்பார்க்கும் அளவுக்

www.padippakam.com

கு கல் நெஞ்சம் படைத்தவர்களா எம்மக்கள்? இதை நாங்கள் கேட்காதுவிட்டாலும், அங்கு வந்திருந்த இந்நாட்டவர் எண்ணியிருக்கலாம்?!

3. எதிர்காலத்திலாவது அகதிகளுக்காக என்று ஏதாவது விழா எடுத்து நிதி சேகரியுங்கள். அவை ஆயுதங்களின் பக்கம் போகாதபட்சத்தில் எமது ஒத்துழைப்பு நிச்சயம் உண்டு. தகுதி உள்ளவர்களிடம்தான் கோரிக்கை விடலாம்.

-நட்புடன், 'சுழியோடிகள்'.

---

சுழியோடிகள் அவர்களுக்கு,

கடலின் வளர்ச்சிக்கு எனது பாராட்டுக்கள். ஆனாலும் ஒரு குறை! கடலில் நீர் கலங்கிய நிலையில் கண்டேன். (அலை 11). ஏன்? அதாவது அச்சு எழுத்துக்களைத்தான் இப்படிக் குறிப்பிட்டேன். முதலில் நீர் தெளிவாக இருந்தால் தான், பார்த்ததும் குளிக்க வேண்டும்போல் இருக்கும். அதுபோல் ஒரு சஞ்சிகையை விரித்ததும், அதன் எழுத்துகள் பார்ப்பவரைக் கவர்ந்து இழுத்தால் தான் வாசிப்பதற்கு ஊக்கம் ஏற்படும். இக்குறையை நிவர்த்தி செய்ய ஆவன செய்யவும். அத்துடன் அலை 11ல் வீட்டு நூலக விளம்பரத்தில் விலாசம் எதுவும் தெரியவில்லை. தயவு செய்து அவ்விலாசத்தை மீண்டும் போடுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

-தங்களது வாசகன்,
திருவையூர் சிவா,
போகும்.

( எல்லாவற்றிற்கும் முக்கியகாரணம் ஆகக் குறைந்த வசதி. படிப்படியாக குறைகளை நிவர்த்திக்க முயற்சிக்கிறோம். வீட்டு நூலக விலாசம்....

நூலக முகவரி: SIRUVAR AMUTHAM
IM WINKEL-2,
5013 ELSDORF/RHLD
TEL......... 02271/66527

---

'கடல்' ஆசிரியர் குழுவுக்கு,

தங்களுடைய(?) கடல் புத்தகத்தின் அலை 11 பார்த்தேன். யாவும் நன்றாக இருந்தன. இருந்தாலும் இரா. சிவரஞ்சன் எழுதும் கட்டுரைகளை இந்த அலையில் காணாமல் போனது மிகவும் கவலைக்குரிய விடயந்தான். எனது பிள்ளைகள் படிக்கும் 'மழலைப் பட்டாளம்' பகுதியும் இந்த அலையில் இடம் பெறத் தவறியமை ஏன் என்பது தெரியவில்லை. இட நெருக்கடிதான் காரணமென்றால் பரவாயில்லை.

மேலும், இந்த அலையில் அதிமேதாவியின் அவசரக் குறிப்புகளை வாசிக்கும் போது,, மிகவும் வேதனையாக இருந்தது.

யார் நீ ராமசாமி? எழுதுவதை ஒழுங்காக எழுதி விமர்சிக்கப் பழகு. கடலைப் பொறுத்தவரையில் சிவரஞ்சன் சொல்லும் தத்துவம் எல்லோரும் விரும்பி வாசிக்கிறார்கள். அதைத் தவிர சந்திப்பு, இது எப்படி இருக்கு, பகு


படிப்பகம்

## என்னுயிர்க் காதலிக்கு,

நான் இன்று நான் இல்லை மானே
நடை பிணமாய் வாழுகின்றேன் நானே
உன் நிலையை எனக்கு நீ உணர்த்தி விட்டாய் -ஆனால்,
என் நிலையை மனதிற்குள் புதைத்து விட்டாய்
முகம் பார்த்து வாழ்வதற்கு விரும்புகின்றேன் - உன்
முகம் பார்த்து உயிர் விடவும் விரைகின்றேன்
என்னுயிரும் உருகுவது கேளாதோ! அதில்
உன்பெயரும் கருகுவதைப் பாராயோ
கையினிலே இருப்பதனால் அழிந்து விடும் - அதுவே
இதயத்தில் இருப்பதனால் வாழ்ந்து விடும்
உனது மனம் எனைத் தினமும் நினைக்கிறது-அதை
எனது மனம் அறிந்ததனால் திளைக்கின்றது.
என்றொருநாள் உனது பதில் கிடைத்து விடும்
அன்றொருநாள் என்வாழ்க்கை முடிவாகும்!!

அன்புடன்,
ஜெ. அனிதாப் பிரியன்

---

இதழ்கள் உனக்கு வாசிக்கப் பிடிக்காவிட்டால் விட்டு விடு. புத்திஜீவியின் பதில்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாசகர்களை தெரியாத உமக்கு, உம்முடைய நிலைமைகளை (எதிர்)பார்த்து கவலைப்படுவதா இல்லை சிரிப்பதா?

– என். ரவி,
5140 ஏர்கெலென்ஸ்.

---

அன்பின் 'கடல்' ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கம். 'கடல்' பத்திரிகை மூலம் பல நல்ல சுரமான செய்திகள், விசயங்களை அறிந்து கொண்டிருக்கிறேன். 'கடல்' பத்திரிகையின் வளர்ச்சிக்கு எனது நல் வாழ்த்துக்கள்.

– அன்புடன்,
மு. புலேந்திரன், 5090 லிவகூசன். 3.

---


வாசகருடன் சில பிரச்சனைகள்

முத்தாரம் பகுதியில் இடம்பெறும் கடிதங்கள் எம்மால் சுருக்கியும், திருத்தியுமே பிரசுரமாகின்றன. எல்லோரது கடிதங்களும் இடம்பெறவும் இடநெருக்கடி. இதனால் பல வாசகர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டாலும், எமது பிரச்சனையை புரிந்து கொள்ளுவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

தொடர்ந்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள். வெறும் பாராட்டுக்களாக எழுதாமல், உங்கள் உண்மையான அபிப்பிராயங்களை எழுதுங்கள்.

--------வரவேற்கிறோம்.----------சுழியோடிகள்--------------

www.padippakam.com



சனா.லூனா.

Erft மாவட்டத்தில் புத்தாண்டு விழா நடைபெற்றது. இந்தியாவிலிருந்து நோட்டீஸ் அடிச்சு இருபது பேருடன் விழா நடத்தியவர் 450 பேருக்கு மேற்பட்ட சனக்கூட்டத்தைக் கண்டு விறைச்சுப் போயிருந்தாராம்.

*** இலக்கியச் சந்திப்பின் நோட்டீஸ் இந்தியாவிலிருந்து அடிச்சு வந்தாலும் வரவாம் போலிருக்காம். அதற்காக அவர் அவர்களுடன் சுற்றித் திரிகின்றாராம்.

*** Krefeld ல் இந்துமாமன்றம் வைக்கச் சிலர் முயற்சி எடுத்திருக்கின்றார்கள். கிறீஸ்த்தவத்திற்கு மாறிய சிலர் ''இங்கே இந்து மாமன்றம் வைக்க அனுமதியாதீர்கள். இந்து சமயம் வன்முறைகளைத் தூண்டிவிடும் சமயமாகும். இலங்கைப் பிரச்சினைக்கு இந்து சமயந்தான் காரணம். அது மட்டுமல்ல இந்தியா பாகிஸ்த்தான் ஆப்கானிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளின் எல்லாவிதமான வன்முறைப் பிரச்சினைகளுக்கும் இந்து சமயந்தான் காரணமென்றும் இங்கும் இந்து மாமன்றம் வைக்க அனுமதித்தால் வன்முறைகளைத் தூண்டி விடுவார்கள். அனுமதிக்க வேண்டாம் என்று பெட்டிசம் போட்டிருக்கின்றார்கள்.

*** பைபிளால் மூளைச் சலவை செய்யப் போன பல இளைஞர்கள் சலவைக்குப் பதிலாகக் ''கலவை'' செய்து ராட்டிங்களில் ஆஸ்பத்திரியொன்றையே நிரப்பி விட்டார்கள். நடந்துகொண்டு ரைப் அடிப்பதும் படுத்திருந்து கொண்டு நாடக வசனங்களை முழங்குவதுமாகவே இருக்கின்றார்கள். பார்த்தால் பரிதாபமாகவே இருக்கின்றது.(தேவைதானா)

*** விழா நடத்துவதில் ஒதுங்கியிருந்தவர்கள் வெள்ளைத் தோல் கைகளைக் குலுக்குவதிலும் மாலை போடவும் முண்டியடித்துக் கொண்டு முன்வந்து ஒரே அமர்க்களமாம்.



படிப்பகம்

www.padippakam.com




அலை ஒன்று........................சித்திரை' 1991

அரசியல் பேசி தங்களுக்குள் தாங்களே தீர்வு காண வாக்குவாதத்தில் ஈடுபடுவோரும், 'என்ன நடந்தாலும் நடக்கட்டும். நான் ஊருக்கு போகமாட்டேன்' என்ற நினைப்பில் வாழ்வோரும், தாயகத்தில் இன்னலுறும் மக்களுக்கு உதவுவதை புத்தாண்டு தீர்மானங்களில் ஒன்றாக மேற்கொண்டால் அதுவே மிகப் பயனுள்ள தீர்மானமாக இருக்கும்.

---

அலை இரண்டு........................வைகாசி' 1991

தனியார் தொடர்மாடி வீடுகளில் வசிப்பவர்கள்கூட அமைதியைச் சரிவரக் கடைப்பிடிக்காமல் வீட்டுச் சொந்தக்காரரின் வெறுப்பைச் சம்பாதிப்பதோடு– 'வெளிநாட்டவருக்கு வீடு கொடுக்கக்கூடாது' என்ற எண்ணத்தையும் வீட்டு உரிமையாளரின் மனதில்– தங்களை அறியாமலேயே விதைத்துவிடுகிறார்கள். எனவே, நாம் வசிக்கும் இடத்தில் அமைதியையும் சுத்தத்தையும் பேணுவதன் மூலம் பல நன்மைகளைப் பெற முடியும்.

---

அலை மூன்று........................ஆனி' 1991

தற்போது கண்ணியாடாக நிகழ்கின்ற எதேச்சாதிகார மக்கள் அழிவுப் போக்குகள், நியாயப்படுத்த முயலும் மக்கள் மௌனங்கள் ஒன்றிய ஆதரிப்பாக தமிழக அரசியலொத்த சண்டித்தனப் போக்குகள், எந்த அதிகார ராணுவம் ஆட்சேபியம் செய்கிறதென்று வெளியுலகிற்குக் காட்ட முழங்கப்பட்டதோ அதேவகையான நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு எதிராகவும் எமது தாக்க, கருத்துக்கள் ஆசி சிறீ சீசிய சக்திவகையிடாக முழங்கிக் கொண்டேயிருக்கும்.



படிப்பகம்

அலை நான்கு..........................ஆடி '1991

வதிவிட அனுமதி, வதிவிட உரிமை போன்றவிசாக்களை பெற்றவர்கள், நாம் இங்கு என்ன நிலையில் எதற்காக வந்தோம் என்ற காரணங்களை உதாசீனப்படுத்திய நிலையில் காயத்தை எட்டிப் பார்த்து வந்ததன் பிரதிபலிப்பு எல்லா ஈழத்தமிழரையுமே போலிகளாக்கிப் போக்கற்ற இடத்துக்கு அனுப்பிப் பொசுங்க வைக்க இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு அவலானாலும், இங்கு அகதியென்று வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் அகதிகள் என்ற நிலையில் தனிப்பட்ட அரசியல் கருத்துக்களை ஒருபுறம் மூட்டை கட்டி வைத்துவிட்டு ஒன்றுபட்டு ஒரே குரலாக, நாட்டில் சுமுக நிலை ஏற்படும்வரையில் திருப்பி அனுப்புதலை நிறுத்த வேண்டும் என்று தனிப்பட்டரீதியிலோ அல்லது சமூக நல அமைப்புகளின் ஊடாகவோ நேரடியாகக் குரல் கொடுப்பது அவசியமாகிறது.

---

அலை ஐந்து, ஆறு.................ஆவணி, புரட்டாசி '1991

புதியவர்களை அலட்சியப்படுத்தி, நாம் இங்கே நிரந்தரமாக வாழலாம் எனக் கனவு காண்பவர்கள், புதியவர்களின் பின்னால் தாய் மண்ணை மிதிக்க வேண்டிய நிலைஏற்படலாம். எனவே புதியவர்கள், பழையவர்கள் என்ற பாகுபாட்டை மறந்து, எல்லோரும் உயிருக்கு உத்தரவாதமற்ற அகதிகள் என்ற நிலையில் முன்னெடுப்புகளை செய்வதன் மூலமே உயிர் வாழ்வதற்கான உத்தரவாதங்களை உறுதிப்படுத்த முடியும்.

---

அலை ஏழு.......................... ஐப்பசி '1991

சில முன்னெடுப்புகளில் கூட விட்டுக் கொடாமை இங்கு வெளிவரும் சஞ்சிகையாளர்களிடையே எப்போதும் மக்களிடையே இந்த புரிந்துணர்வுகளால் புதுவழி உதிப்பது எங்ஙனம்?

---

அலை எட்டு..........................கார்த்திகை '1991

உண்மையில் ஒவ்வொருவரும் புத்திசாலியாகி தான் சொல்வது சரி என்பது சிறந்த விவாதமானால் கூட, விட்டுக் கொடுப்புகளுக்கு இடமில்லாதபோது ஒன்றென்ன இரண்டென்ன எத்தனை வருடங்களானாலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தோன்ற வழியுண்டா என்பதுதான் தற்போதைய கேள்வி. அப்படி ஆக்கத்திற்கான அறிகுறிகள் தோன்றினாலும் அதை அபகரித்துப் பெயர் வாங்கவென எத்தனை மனிதர் எம்முள் முள்ளாக.....

www.padippakam.com

அலை ஒன்பது ......................... மார்கழி '1991

ஒரு பொதுச் சேவையில் ஈடுபடும்போது சிறுசிறு தவறுகள் இடம் பெறுவது தவிர்க்க முடியாததொன்றாயினும், அவற்றை இனம்கண்டு முளையிலே கிள்ளி எறிவது மிகவும் பயன்பாடானதாகும்.

---

அலை பத்து ......................... தை '1992

இன்று எமக்கென சொந்தமாகவேனும் ஒரு அங்குல நிலமேனும் இல்லாத நிலையிலேயே இயக்கங்களின் போக்கானது 'பாசிசத்தை வெளிப்படுத்தும்போது, நாளைக்கு இந்தத் இயக்கங்களிலொன்று தனிநாடு கிடைத்தோ அல்லது மாகாணசபை கிடைத்தோ நாற்காலி ஏறும்போது என்னவெல்லாம் அட்டகாசம் செய்ய முடியும்? எம்முள்ளேயே ஒரு இடி அமீனோ அல்லது கிட்லரோ கூட உருவாகலாம்.

---

அலை பதினொன்று ......................... மாசி '1992

நாகரீகமான விமர்சனங்களின் ஊடாகவே கடல் கருத்துப் பரவலை மேற்கொள்ள விரும்புகின்றது.

---

அலை பன்னிரண்டு ......................... பங்குனி '1992

கடல் மத சார்பற்ற சஞ்சிகையாகும். அதற்காக மதங்களைக் கேவலப்படுத்துவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை.

---

''சந்திகளிலும் சந்திப்புகளிலும் கடலை மாசுபடுத்துவதாக எண்ணிச் செய்யப்படும் விமர்சனங்கள் கடலுக்கு விளம்பரமாகவும் வாசகர் தொகையை அதிகரிப்பதாகவும் அமைகின்றன. இத்தகைய விமர்சனங்களைக் கடல் மேலும் மேலும் வரவேற்பதுடன் இவற்றைச் செய்பவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

''ஆசிரியர் குழு''



படிப்பகம்

www.padippakam.com

# அதிகாரங்களின் ஆவணக்குறிப்புகள்

— ராமசர்

சம்போ சிவசம்போ

-----------------

போர் நிறுத்தம் இப்ப இங்க பொ
ங்கிப்போட்டு தின்ன வாங்கோ!
கொழும்புக்கும் இப்ப ரயில் ஓடுதா
ம்.
திம்புவில பேச்சுவார்த்தை நமக்கினி
என்ன குறை
தம்பிமாரே! தங்கைமாரே! வாரு
ங்கோ
அண்ணாமாரே! அக்காமாரே! வா
ருங்கோ

-----------------------------------------------

85 இல பல்கலைக் கழக மாணவர்கள் சிலரால் இயக்கப்பட்ட போர் நிறுத்தம் — மாயமான் என்ட தெருக்கூத்தின் தொடக்கந்தான் இது என்டதை நீ அறிந்திருப்பாயோ? என்னவோ! அந்தக் காலத்திலதான் மன் சுமந்த மேனியர் என்ட நாடகத்தையும் மேடைகளிலே போட்டார்கள்.

உண்மையில, இந்தக் களிர்வுகள் பாராட்டப்பட வேண்டியனதான். ஆனால், இயக்கங்களுக்கும், தமிழீழம்

என்ட கோசத்துக்கும் ஆதரவாக ஆட்களைச் சேர்ப்பதற்கு மட்டுமே இவை உதவின. என்டதை அப்போது அந்த பட்டகாரிகள் உணரவில்லை. ஒருதடவை தெருக்கூத்தை பார்த்துவிட்டு சம்பந்தப்பட்ட நண்பர் ஒருத்தருக்கு சொன்னன்; "எஞ்சியிருக்கிற பொடியளும் இந்திய, இலங்கைக் காடுகளுக்கு ஓடி துவக்குகளுடன் திரும்ப வேண்டுமென விரும்பித்தான் இதையெல்லாம் செய்யிறியள். ஆனால், இண்டைய நிலமை சொல்லுற சேதியை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பவில்லையா" என.

ே "எங்களுக்குத் தெரியும். அனைத்தையும், அராஜகங்களையும் அறிவோம். இரவத் படையில் புரட்சி வராது என்பதையும் சொல்கிறோம் ஆனால், இப்போது செய்யக் கூடியது இவ்வளவுதான். இது கூட ஒருவித பங்களிப்பல்லவா" என்டார் அந்த நண்பர். ஆனால், யாழ்ப்பாண மக்களுக்கும், கொழும்புக்கு ஓடுற ரயிலுக்கும் இருக்கக்கூடிய அபாரமான ஒட்டுதலை எந்தவித பங்குமின்றி சொன்னதை ஏத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

எங்களைத் தெரிகிறதா?
எங்கள் குரல் கேட்கிறதா?
என்பது போன்ற விழிப்புகளோடு,
வீதியில் இறங்கு,
வெளியில் வா
போராடு..... என்று சொல்லி



படிப்பகம்

அர்த்தமிருப்பதாக எண்ணிக் கொண்டு அழுகையாய் முடித்தார்கள்.

ஆனால், அந்த மாயமானில் பங்கு பற்றிய பலர் வீதியில் இறங்கி, வெளியில் வந்து, விமானமேறியதை நீ அறிந்திருக்க நியாயமில்லை. இதுதானா அர்த்தமென நீ நினைக்கலாம். இதற்கெல்லாம் காரணம் தமிழீழமென்ட கோசமும், அதனை முன்னெடுத்ததாக பாவனை செய்த விடுதலை(?) இயக்கங்களும்தான் என்டால், இன்று கூட அதனை ஏத்துக்கொள்ள பலரால் இயலவில்லை.

தனித் தாயகத்துக்கும், தடுப்பு விடுப்புக்கும் துரோகம் செய்ய இவர்களுக்குள்ளே இருக்கிற கருத்துகள் இசையவில்லையோ என்னவோ!

"கடந்த காலப் பாடங்கள் இன்று படிப்பினைகள். செப்பனிடப்பட்ட சனநாயக அன்ட வெளியில பாதைகள் சம்பந்தமான தேடல்கள். நம்பிக்கை வீண் போகாது. நயவஞ்சகம் நிலைக்காது; என்டு சொல்லிக் கொண்டு முற்று முழுதாகச் சொல்லப்படும் அராசக முகாமுகள் கூட ஆசை காட்டத் தொடங்கிவிட்டன"; இப்படியாக எனது நண்பர் ஒருத்தர் அடிக்கடி அலுத்துக் கொள்வார்.

வெளி உலகச் சிக்கல்களைத் தீர்மானிக்காது, பின்னணிகளை முனங்கான 'விரும்பாது, தேசிய இனப் பிரச்சனைகள் கூர்மையடைந்துவிட்டதாக முற்போக்கு முகாமுகள் தங்களது பங்குகளுக்கு செழுமை சேர்ப்பதையும் அந்த நண்பரால் ஏத்துக் கொள்ள முடியவில்லை. 'மாற்றம் வருமென்பதில் மாற்றமேயில்லை' என்டதை அவருக்கு அடிக்கடி நினைவுபடுத்துவேன்.

மாற்றம் வருந்தான். படையெடுத்து கடல் கடந்து தேடிப்போய் சனங்களை சுட்ட காலம் என்டு ஒன்டு இருந்தது உனக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால் இப்ப இருந்த இடத்தில பட்டனை அமத்த பல ஆயிரம் மைல்களுக்கப்பால் சனங்கள் சுடப்படவில்லையா! இதுதானா நீ சொல்லுற மாற்றம்.

இயக்கம் இயக்கம் என்டும், உட்கொலை அராசகம் என்டும் ஒரு மனுசன் கொலை செய்யப்பட்ட ஆரம்பத் தவறுக்காய், அடித்துப் புரண்டு மனிதம் செத்துவிட்டது, மக்களுக்கான பாதை விலகிவிட்டது என்டு விரக்திப் புராணம் பாடி விலகி வந்த உனக்கெல்லாம் மாற்றத்தைப் பத்திக் கதைக்க என்ன அருகதை?

சில கொலைக்காய், துரோகம் எனச் சொன்ன உன்னைப் போன்றவர்கள், இன்டைக்கு நடக்கிற லட்சக் கணக்கான கொலைகளைத் தெரிந்து கொண்டும், மாற்றம் வருமென்பதில் மாற்றமேயில்லை என்டு புலுடாக் கதைகள் விட்டால், நம்புவதற்கு நானென்ன இளிச்சவாயனா!

நண்பர் மிகவும் கடுமையாகத்தான் கத்தினார். நான் சொன்னதன் அர்த்தம் அவருக்குப் புரியவில்லையா? அல்லது உபதேசம் செய்கின்ற உத்தேசமா? ஏதோ கதைக்க வேண்டுமென்ட ஆர்வம் அவருக்குள்ள இருக்கிறது பெரிய மனசு பண்ணி அதைத் தொடர விடுவோம்.

www.padippakam.com

இயக்க அடிவருடிகளை விடவும், உன்னைப் போன்றவர்கள் வித்தியாசமானவர்கள்தான். அதற்காக, அவங்களுடன் அலையாதே! உன்னையும் ஏமாத்தாதே!

பார்... பார்... வெளியுலகை பார். போதைச் செடிகளை விதைத்துவிட்டு போலிக் காரணம் சொல்லிச் சென்று மனித அறுவடைகள் செய்கின்ற மிருகத்தனமான செயலைப் பார். ஆபிரிக்கப் பவுணை அலாக்காகத் தூக்குவதற்கு, அரைப் பட்டினியோடு உழலுகின்ற மண்ணின் மைந்தர்களின் நெஞ்சைக் குறி பார்க்கும் கனரக ஆயுதங்களைப் பார். எதியோப்பியாவிலும், சூடானிலும் எனின்றும் விடியவில்லை. விடிந்த பூமிகளிலும் விழிகள் மூடி நிற்கும் கோடிக்கணக்கானவர்களின் வாழ்வின் அவலத்தை பார். யூகோவும், மொஸ்கோவும் பிரிக்கப்பட்ட விதத்தைப் பார். ஆசியாவை... லத்தீன்–தென்னமெரிக்காவை.... மத்திய கிழக்கை... இந்த உலகத்தையே ஒரு தடவையாவது பார்.

இதற்கெல்லாம் காரணம் வர்க்கப் பிரச்சினைதான். என்றால் உலகப் புரட்சி வர வேண்டுமென்றா எதிர் பார்க்கிறாய்?

அல்லற்படும் எமது நாட்டு மக்களின் அமைதியான வாழ்வுக்காய் இங்கிருந்து நீ அயராது உழைப்பதாக நினைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு தூரம் அர்த்தமுள்ளது என உனக்குள்ளே யோசித்துப் பார்.

நானும் சரி, நீயும் சரி, இன்னும் பிற புத்திஜீவிக் கும்பல்களும் சரி, நாட்டுக்குத் திரும்பிப் போகத் தயாரா? நாட்டுப் பிரச்சினை முடிந்ததன் பின்னர் திரும்புகின்ற எண்ணங்களுடன் ஒரு சிலர் இருக்கலாம். ஆனால், எப்போது அது முடியும்? அந்த அமைதியைக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்? இந்த அனர்த்தங்களின் பின்னணி என்ன? சாம்7உம் டாங்கிகளும் எங்கிருந்து வருகின்றன? மொசாட்டும், போதை வஸ்தும் இவ்வளவு தூரத்திற்கு ஏன் எமது சிக்கலுக்குள் தலையிட்டன?

எதற்காவது பதில் தெரிகிறதா? அப்படித் தெரிந்தால் இனிமேலும், யதார்த்தத்தை மறந்து கதைக்காதே

நண்பர் தனது இயலாமையை வார்த்தைகளாகக் கொட்டுகிறாரா? அல்லது அனைத்தையும் உணர்ந்து கொண்டு அறிவுக்கனி ஊட்டுகிறாரா?... எதுவுமே புரியவில்லை. உனக்காவது புரிகிறதா?

நேற்றைக்கு இலக்கியச் சந்திப்பு நடந்ததாம். இதுவரையில் இரண்டு தடவைகள் போய் வந்த அநுபவம், தொடர்ந்தும் சந்திப்புகளில் பங்குபற்ற அனுமதி தர மறுக்கிறது ஒன்றும் பெரிய விசயமில்லை. ஒருவர் பேச குறிப்பிட்ட கொஞ்சப் பேர் மாறி மாறி கையுயர்த்தி கேள்வி கேட்டு நோட்ஸ் எடுப்பதெல்லாம் மிகவும் முஸ்பாத்தியானது.

புத்தகங்களை பக்கம் பக்கமாக அடித்து நொறுக்கியவர்களை விடவும் புதுமைப் பித்தனில் தொடங்கி ராஜம் கிருஷ்ணன் ஈறாக ஒப்புவிக்கத் தெரிந்தவர்களைவிடவும்; நாட்டு மக்களின் சமகால இருப்புகள்மீது முழுமையாக நோக்க முடிந்த, அனைத்து இயக்க அராஜகங்களையும் எதிர



படிப்பகம்

www.padippakam.com

க்க முடிந்த, முடிப்புள்ளவர்கள் சந்திப்பது கொஞ்சமேனும் வித்தியாசமானது.

போன கிழமை தெரிந்த ஒரு இடத்தில் வருச விழா கொண்டாடினார்கள். மேடை அமைப்பு, பரத நாட்டியம், மங்கள இசை, சிறுவர் நாடகம், சிறுவர் சிறுமியர் ஆற்றிய உரைகள்.... அனைத்தும் பாராட்டப்பட வேண்டியன. முதல் தடவையானதால் அரங்கேறிய டப்பு நாடகத்தையும் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். கூடுதலாக, ஜேர்மன் மக்களும் வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த விழாவைச் செய்தவர்களால் அடுத்த தடவை இன்னும் தரமான ஒன்றைச் செய்ய இயலும். அப்படிச் செய்தால், நாங்களும் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்ப இயலும்.

------------

<u>கடலும், அலைகளும்</u>

ஜேர்மனியில் பல சஞ்சிகைகள் வெளிவந்தன. வெளிவந்து கொண்டிருக்கின்றன. அனைத்திலும் 'கடல்' கொஞ்சம் வேறுபட்டது. நிரந்தரமற்ற இந்த புலம் பெயர்ந்த வாழ்வில் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும். அதனடிப்படையில் ஆக்கங்கள் வெளிவர வேண்டும். என்ற கட்டுமானம் இலக்கியச் சூழலுக்குள் தொடர்ந்தும் இருக்கிறது. அது, மேற்கைரோப்பா, ஸ்கன்டிநேவியா, அவுஸ்திரேலியா, கனடா என விரிந்து காணப்படுகிறது.

நாட்டின் அரசியல், உலக அரசியல், சமூக விடுதலை, பெண் விடுதலை ..... இப்படியாக அலசி, ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்கின்ற அளவிற்கு அநுபவம், தரம் அனைத்தும் ஒன்று சேர்ந்த சில சஞ்சிகைகளும் உண்டு.

பட்டதாரிகளும், விரிவுரையாளர்களும், அரசியல் தெரிந்தவர்களும், இலக்கியவாதிகளும் ஆக்கிரமிக்கும் இந்த இலக்கியச் சூழலில்..... இவர்கள் யார் சுழியோடிகள்?.... 'இ'ளாவுக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்?... கிசு, கிசு எழுதுகிறார்கள். சமகாலத்தில் வாழ்கின்றவர்களின் தனிப்பட்ட இயல்புகளை கதைகளாக நிரப்புகிறார்கள்..... இது ஒரு மஞ்சள் பத்திரிகை. (கண்டவர்கள்) எல்லாம் கண்டதையும் எழுதத் தொடங்கிவிட்டார்கள். உடனடியாக இந்த சஞ்சிகையை நிறுத்த வேண்டும் இல்லையேல் சமூகம் சீரழிந்துவிடும் .... என்ற போர்வையில் விமர்சனங்கள், வாசகர் கடிதங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. இத்தொடக்கங்கள் சமூக நலனின் மீதுள்ள அபார விருப்பையும் முன்மொழிகின்றன

இந்த மொழிகளைத் தம்வசம் வைத்திருப்போர் இதுவரை அடித்த அலைகளில் அகப்படாது விலகியிருக்கலாம். ஆனால், கடலுக்குள் விரும்பி இறங்கி சில அலைகளிலாவது அடிபட்டிருக்கிறார்கள் என்பது இப்போது தான் புரிகிறது.

சமூகத்தை செப்பனிட வேண்டும் என்று குரல் கொடுப்போரின் பிழையான பக்கங்கள், சரியாக சொல்லப்படுவதாலோ; சாவு வியாபாரங்களின் சீரழிந்த கலைகளை எமது கசலைகளாக்கி கூத்தடிக்கின்ற மேடைச



படிப்பகம்

ளை விமர்சிப்பாரோ; கழிந்த குறிப்பேடுகளுக்காக சில பக்கங்களை ஒதுக்குவாரோ; சமூகம் சீரழிந்து விடாது....... கவலைப்படாதீர்கள்.

கடலில் எழுகின்ற அனைவரும் அந்தத் தகுதியுடையவர்களா?... என்றும் கேள்வி எழ வாய்ப்புண்டு. புனைபெயர்களில் மறைந்து நிற்பவர்கள் யார்?... யார்? என தெரியாத போதிலும், ஒழுங்காக வாழ்பவர்கள்தான் ஒழுங்கற்றவற்றை விமர்சிக்க இயலும் என்ற இயல்பு பொதுவானது ஆனால், காலங்காலமாக எமது சமூகத்திற்குள் இப்படிப்பட்ட ஒரு விளையாட்டுகளுக்கு குறைவேயில்லை.

இனப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நாடு துண்டாடப்படுவது தவிர்க்க முடியாதது என பிரேமதாசா கவலைப்படுவதுபோல, புதியபாதை சம்பந்தமாக மாணிக்கதாசன் பேட்டி கொடுப்பதுபோல; மக்கள் புரட்சி தொலைவிலில்லை என பிரபாகரன் சொல்வதுபோல...... பல சஞ்சிகைகளின் சில பக்கங்களாவது வெளிச்சமாகும்போது இந்த அலைகள் நிறுத்தப்படக் கூடியன அல்ல.

இந்த மேற்கத்திய புலம் பெயர்ந்த இலக்கியத்தில், இன்று புல்லாங்குழல்கள் (?) இசை பாடுகின்ற நேரம். இசை சுரமானதுதான். அதைக் கேட்பவர்களும் பரபரப்பாக....... இரண்டு மூன்று பேர்களால் பேசப்படுபவர்கள்தான்.

அதற்காக... இலவங் கோதுகளுக்கு இசை பாட ஆசை வரக் கூடாதா?

அதனால்; கடலும், அலைகளும் நிறுத்தப்படக் கூடியன அல்ல. அவ் வெயர்த்தகையென்று ஒன்று இருந்தால்..... அதற்கு மாறானது.

---

## காதலின் தீபமொன்று!

விரிவுரை முடிந்து அனைவரும் வெளியேறுகின்ற நேரமது. அவனும், அவளும் ஆளாளைத் தேடுகிறார்கள். பார்வைகள் சந்திக்க நிலம் நோக்கி நாணங் கொண்டு அவள் நடக்க, அவன் தனது அறை நோக்கிச் சென்றுவிடுகிறான். இன்று நேற்றல்ல, ஐந்து வருடங்களாக நடக்கின்ற சங்கதியிது. அவன், அவளது மாமன் மகன். சின்ன வயதிலிருந்தே இவளுக்கு இவன்தான் என பெற்றோர்கள் நிச்சயித்தது பல்கலைக்கழகம் வரையில் தொடர்கிறது. ஊரிலிருந்தபோதே அவளும் நண்பிகளும் சேர்ந்து நிற்கின்ற நேரத்தில், அவனைக் கண்டால் கேலி பண்ணுவார்கள் உங்களுடன் மச்சாள் கதைக்கப் போகிறாளாம்; கிட்ட வரட்டாம், என்றெல்லாம் குரல் கொடுப்பார்கள் அவன் வெட்கத்தில் நழுவி விடுவான். அப்படி ஒரு சுபாவம், என்றாலும் அவளை உயிருக்குயிராய் விரும்பினான் வாழ்ந்தால் அவளுடன்தான் வாழ்வேன் என்ற எண்ணம் அவனுக்குள்ளே அசைக்க முடியாததாக இருந்தது.

தனிமையில் சந்திக்கும்போது ஏதோ ஒரு அசட்டுத் தைரியத்தில் தனது உணர்வுகளை அவளிடம் வெளிப்படுத்தியுள்ளான். அவளும், உங்களுக்காகவே வாழ்கிறேன் என்றிருக்கிறாள். இப்படியான சந்திப்புகள் உணர்வு ரீதியான இணைவு வாழ்வுக்கு பல

www.padippakam.com

மான அலங்காரம் இட்டது. ஒரே ஊர், அடிக்கடி நிகழும் சந்திப்புகள் எல்லாம் பேராதனை வந்தவுடன் ஆராதனை செய்து சந்திக்க வேண்டிய நிலையாய்ப் போய்விட்டது.
புதிய சூழல், புதிய அறிமுகங்கள் கொஞ்சம் இடைவெளியை ஏற்படுத்தினாலும், பார்வைச் சந்திப்புகள் தொடர்ந்தன. அதனால்தான் இந்த நாணுகின்ற கோணங்கள்.

பலபேர் கூடுகின்ற இடங்களில் சந்தித்து சந்தோசிப்பது இவனைப் பொறுத்தளவில் ஏற்புடையதல்ல. எங்களுக்குத் திருமணம் முடிந்ததன் பின்னர், இந்த பூங்காவில் சுற்றலாம். மாவலியில் போகலாம். மர நிழலில் அமர்ந்திருந்து ஐஸ் கிறீம் ஊட்டி மகிழலாம். இப்படி அவளிடம் சொல்லியிருக்கிறான். "அங்கே பாருங்கள்; காதலர்கள் எவ்வளவு அந்நியோன்யம் ஆகிறார்கள்; என்ன ஆனந்தம்; முகத்தோடு முகம் சேர்வதைப் பாருங்கள்; வாருங்கள்; இது பேராதனை, இது பூங்கா; இது எங்கள் ஊர் அல்ல; வாருங்கள்..." சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவள் அழைத்திருக்கிறாள்.

"நான் உன்னைக் காதலிக்கிறேன். இந்தக் காதல் தெய்வீகமானது. உன்னைத் தொடுவதென்றால் அது திருமணத்திற்குப் பின்புதான். எனது உணர்வுகளை உன்னால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது."...... இது அவன்.

இந்த ஓராண்டு நிறைவிலே நாம் பலரது உதவிகளை நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாகிறோம்.
திருமதி. நோறி அவர்களின் அறிமுகத்துக்கு காரணமான
திரு. ஆர். சுந்தரேஸ்வரன்.....
திரு. வால்ரர் லான்ட் அவர்களின் அறிமுகத்துக்கு காரணமான
திருமதி. நோறி அவர்கள்.....
டியக்கோனியின் உதவிக்குக் காரணமான
திரு. வால்ரர் லான்ட் அவர்கள்....
பல தடவைகள் பிரதிகளை அதிகரித்தபோதும் உற்சாகப்படுத்தி
உதவி செய்யும் டியக்கோனி நிறுவனத்தார்....
கடிதங்களாலும், விமர்சனங்களாலும், கண்டனங்களாலும்
சஞ்சிகையின்பாலுள்ள கவனிப்பை உத்தரவாதமாக்கி, எம்மை
உற்சாகப்படுத்தும் வாசகர்கள்....
சஞ்சிகை தொடர்ந்து வெளிவர ஆக்கங்களை வழங்கும்
ஆக்ககாரர்கள்....
யாபேருக்கும் எமது மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

'குழியோடிகள்'



படிப்பகம்

இப்படியே பல்கலைக் கழக வாழ்க்கை இரண்டு வருடங்களைக் கடந்து விட்டிருந்தது. ஆனால், தெய்வீகம் மட்டும் எல்லையைக் கடக்கவில்லை. விடுமுறைக்கு ஊருக்குப் போனபோது, திருமணத்தை விரைவில் நடத்த இருப்பதாக பெற்றோர்கள் சொன்னது, இவனது தெய்வீகத்துக்கு இன்னும் வலு சேர்த்தது என்று சொன்னால் மிகையாகாது.

இந்த முறையும் அவள் வந்தாள். "வாருங்கோ, இந்த மாலைப்பொழுதில் பூங்காவில் சுற்றிவிட்டு வருவோம், புதுக் கவிதை படிப்போம் . . . . . "இன்னும் என்னவெல்லாமோ சொன்னாள். எங்களுக்கு விரைவில் திருமணம் நடக்கப் போகுதுதானே! ஏன் பயப்படுகிறீர்கள். இங்கே உள்ள ஊர்ப் பொடியள் எங்களைப் பார்த்து யாருக்கும் அள்ளி வைக்க ஏலாது, வாருங்கள்" என்றாள். இப்போதும் அவன் தெய்வீகத்தைப்பற்றியே பிரசங்கம் வைத்தான். அதனை தாங்காமல் அவள் விலகிவிட்டாள்.

அனுபவிக்க வேண்டிய வயதில், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு எதிர்பார்ப்புகள் இருப்பது... தவறில்லை... தானே!

மாதங்கள் இரண்டைக் கடக்க, மாலை நேரத்தில் பூங்காவின் ஓரம் அவளைத் தேடியவனுக்கு, அவளது சிரிப்பொலி கேட்டது. திரும்பிப் பார்த்தபொழுது ஒரு இளைஞனின் மடியில் அவள் தலை வைத்து படுத்திருந்தது தெரிந்தது.

கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. அறைக்கு வந்த பின் படுக்கை. அடுத்த நாள் விரிவுரைக்கும் செல்லவில்லை. எப்படியும் அவளுடன் கதைத்துவிட வேண்டுமென்று பூங்காவுக்குச் சென்றான். நேற்றுப் பார்த்த இளைஞனுடன் தான் இருந்தாள். கை காட்டி கூப்பிட, அவள் அந்த இளைஞனுக்கு ஏதோ சொல்லி சிரித்து, கிஸ் கொடுத்துவிட்டு இவனருகில் வந்தாள்.

எதைக் கேட்பது, எப்படிக் கேட்பது என்ற தடுமாற்றத்துடன் இவன் நிற்கும்போது, அவளாகக் கதைத்தாள். "அவர்தான் என்னுடைய 'போய் பிரண்ட்'. உங்களைப்போல சாமிக் கோஷ்டியை யார்தான் காதலிப்பார்கள். எத்தனை தடவைகள் உங்களை நான் கேட்டிருப்பேன் எனது ஏக்கங்களை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர் புரிந்திருக்கிறார். அவரைத்தான் நான் திருமணம் செய்யப் போகின்றேன். குட்பை..."

சொன்னவள் திரும்பிச் செல்ல, நடைப்பிணமாக அறைக்கு வந்த அவன் ஒரு வாரத்தின் பின் ஊருக்கு வந்தான். அந்தக்காலம், 83 பூலைக்குப் பிற்பட்டது. மிகவும் விரக்தியாய்க் கதைத்தான். சில நாட்களின் பின் இயக்கத்துக்கு போய்விட்டதாக கேள்விப்பட்டேன்.

இப்போது, அவனது பெயரும் தியாகிகளின் பட்டியலில் இருப்பதாக, தெரிந்தவர்கள் சொன்னார்கள்.

'காதலின் தீபமொன்றை' நெஞ்சிலே ஏற்றி வாழ்ந்த அவனின் உணர்வுகள் இப்படி அஸ்தமனமானது துரதிஷ்டவசமே!

www.padippakam.com

# புத்தாண்டு விழா

- சரவணன் -

எங்கேயாவது ஏதாவதொரு விழாவோ சந்திப்போ கிடைக்காதோ என்று மென்று கொண்டிருந்த எனக்கு ''ஏர்வ்ற் மாவட்டத்தில் தமிழ்ப் புத்தாண்டு விழா'' நோட்டீஸ் கிடைத்து விட்டது. நோட்டீஸைப் பார்த்ததும் 15 மணிக்கு அதாவது பின்னேரம் மூன்று மணி என்றதும் எரிச்சல் வந்தது. யார் இந்த நேரம் போவார்கள்? மாலை 6மணி என்றால் நல்லதென்று முணுத்துக் கொண்டேன்.

தமிழன் மூன்று மணி என்றால் நாலுமணி என்று தானே அர்த்தம்? நானும் நாலுமணிக்குக் Horrem போக ஆயத்தமாகிக் Koln போய் அங்கிருந்து Aachen போகிற றெயினில் ஏறி மூன்றைம்பைந்துக்கு(3.55) இறங்கி வேர்க்க விறைக்கக் களைத்தோடி இடத்தைச் சேர்ந்தேன். ஒரு சத்தமும் இல்லை.

ஒருவர் வந்து வாருங்கோ வாருங்கோ என்று இழுத்துப் பிடித்துக் கொண்டு போனார். உள்ளே மனோகராத் தியேட்டரைப் போல பெரிய மண்டபம் சனங்கள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ''என்னடாப்பா தமிழன் கெட்டுப் போனான் போல இருக்கின்றது?'' எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. எதற்கும் விசாரித்தால நல்லதென்று கேட்டுப் பார்த்தேன். மூன்று மணிக்கே தொடங்க வேண்டியது சாம்பிராணிக் குஞ்சியால மூன்று பத்துக்குத் தொடங்கி விட்டதென்று சொன்னார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! வீடியோத் தம்பியை எதிர்பார்த்து ஐயரே முகூர்த்தத்தைத் தள்ளிப்



படிப்பகம்

www.padippakam.com

போடுகின்ற இந்தக் காலத்திலை பத்து நிமிடம் தாமதித்தது பரவாயில்லை என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். என்னென்ன நடந்தது என்று முகவுரை எழுத ஒருவரைத் தேடிப் பிடித்துக் கொண்டேன்.

தமிழர்களுடைய கொண்டாட்டங்களில் நேரத்துக்கு நடந்தது என்றால் இதுதான் என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார். விசாரித்ததில் உண்மைதான் என்று தெரிந்து தமிழன் திருந்தி விட்டான்! என்று மனதிற்குள் கத்திக் கொண்டேன். விழாவும் பெரிய இழுபறிக்குள் கிடப்பதா எழும்புவதா என்று ஒரு மாதிரி எழும்பி விட்டதாம்! செயற்குழுவிற்குள் குத்து வெட்டுக்கள் குழப்பங்கள் என்று நடந்தும் நேரத்திற்குத் தொடங்கியது எனக்கும் பெரிய ஆச்சரியந்தான்! விழாவிற்கு வந்த பாரதிய அதிதிகளுக்கு மாலை போடுவதில் பிச்சுப் பிடுங்காத குறையாம். செயற்குழுவினரின் துணைவிகள் நான் முந்தி நீ முந்தி விளையாட்டாம்.

அறிவிப்பாளராக ஒருவர் மேடையில் ஏறி தமிழே வாசிக்க முடியாமல் தட்டுத் தடுமாறி விழாவையே அலங்கோலப் படுத்திவிட்டார் என்றே எல்லோரும் சொன்னார்கள். உண்மைதான்! இப்படியும் விளம்பரம் தேடிக் கொள்ளலாமாம்!

ஆரம்பத்தில் சில நிகழ்ச்சிகள் பொறுமையைச் சோதிப்பன போல இருந்ததாம். நான் போன நேரம் தப்பி விட்டேன் என்று சொல்லலாம். அரை மணிநேர நாதஸ்வர மங்கள இசை. பிறகு சிறுவர் நிகழ்ச்சிகள் தொடங்கியது.

மண்டபம் ஆனந்தத்தில் மூழ்கிவிட்டது. நொய்ஸ் விக்னேஸ்வரா நடனக் கல்லூரி ஆசிரியை திருமதி கிருபாநிதி ரட்னேஸ்வரனின் மாணவிகள் (சிறுமிகள்) பரதத்திற்குப் பாவங்கள் பிடித்து எல்லோரையும் மெய் மறக்கச் செய்தனர். டியூஸ்போர்க் திருமதி சிவஞானம் ஆசிரியையின் மாணவிகள் ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை என்று சொந்த நாட்டிற்கே இழுத்துச் சென்றனர். சிறுவர்கள் சிறுமியரின் பேச்சுகள் தமிழை அச்சசுத்தியாக அடித்துச் சொல்லின.

கோவாட்டம் நன்றாக இருந்தது. இதற்கொரு தமிழ்ப் பாட்டாவது கிடைக்கவில்லையா? என்று கேட்க வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

போலிருந்தது. ஏதோ மாராட்டிப் பாட்டும் அந்த வேசமும் போட்டால் தமிழ்க் கலாச்சாரமாகி விடுமா?? ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற சிறுவர் நாடகம் நன்றாக இருந்தது.

விழாவின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட 19 சிறுவர் சிறுமியருக்கு ஒரே பெறுமதியான 19 குத்து விளக்குகள் வழங்கப்பட்டன. இவற்றை டோற்றமூண்ட ''தூர்க்கா'' வியாபார நிறுவனம் வழங்கியிருந்தது. இதன் பின்னர் ''வேண்டும் விழா எமக்கு'' கவிதையைத் தொடர்ந்து ஐசக் இன்பராஜாவின் ''லூஸ்மாஸ்டர்'' எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. இறுதி நிகழ்ச்சியாக ''அழகிய கோபுரம்'' என்ற நாடகம்?? ஒன்று நடைபெறும் என்று சொல்லித் தொடங்கியது. நாடகங்கள் சினிமாவாகி வந்ததைப் பார்த்திருக்கின்றோம். சினிமாவே நாடகமா மாறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

நடிப்புத் திறன் கலையார்வம் முயற்சிகள் எவ்வளவு தான் இருந்தாலும் கலை என்றால் என்ன என்று தெரியாமல் இருந்தால் அதில் எந்த விதமான பயனும் இல்லை. எந்த ஒரு கலை இலக்கிய வடிவங்களும் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்க வேண்டும். இந்த அரிச்சுவடி கூடத் தெரியாமல் ஐந்தாறு சினிமாக்களில் கிள்ளி எடுத்துப் பாட்டுக்களையும் கதைகளையும் போட்டு விட்டால் நாடகமாகி விடும் என்று நினைத்து விடமுடியுமா?

''இந்தியக் குப்பைச் சினிமாக்காளையே'' எமது கலை கலாச்சாரமாக நினைத்துக் கொண்டிருக்கும் எமது சிறிசுகளுக்கு ''மாசி மாதம் ஆளான பொண்ணு மாமன் எனக்குத் தானே'' என்ற பாட்டெல்லாந் தேவைதானா? ஏதோ மாமனைத்தான் திருமணம் செய்கின்றது என்று சொல்லிக் கொடுக்கின்ற வேலையாகவே தெரிந்தது. நல்ல கலையார்வம் உள்ளவர்கள் இருக்கலாம். அவர்களுக்குக் கல்வ என்றால் என்ன அரிச்சுவடி தெரியாமல் இருந்தால் யாருக்கென்ன பயன்?? நன்றியுரையையும் கேட்கும் வரை சனங்கள் இருந்தது ஆச்சரியமாக இருந்தது. அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்ல வேண்டும் போலிருக்கின்றது. நேரத்துக்கு விழா தொடங்கியது மட்டுமல்லவாம் விழாவிற்கு எந்த ஒரு பெனிக் கூட யாரிடமும் சேர்க்கவில்லை என்பதெல்லாம் ஆச்சரியமாக

ச. ..!!!



படிப்பகம்

www.padippakam.com

# பூகம்பம் - ஒரு அனுபவம்

**• இராஜன் முருகவேல் •**

பதின்மூன்றாம் திகதி திங்கள் கிழமை அதிகாலை 3.20 அளவில்.....

கால நிலை ஆராய்ச்சியாளர்களையும் புவியியல் ஆராய்ச்சியாளர்களையும், செய்மதிகளையும் ஏமாற்றிவிட்டு 20 செக்கன்கள் நிகழ்ந்த பூமி அதிர்வு புதிய அனுபவமானது.

தொழிற்சாலையில் இரவு நேர வேலையில் நான். என்னுடன் இளைஞர்கள் முதியவர்களென 150ற்கும் மேற்பட்ட சக தொழிலாளர்கள்.

திடீரென மயக்கம் வருவது போன்ற பிரமை. கால்கள் தரையில் பாவாமல் விழுந்துவிடுவது போன்ற உணர்வு. பக்கத்திலிருந்த யந்திரத்தைப் பிடித்துக்கொண்டேன். யந்திரமும் என்னுடன் சேர்ந்து நடுங்கியது.

அந்த பிரமாண்டமான மண்டப. கண்ணாடி யன்னல்கள் பலத்த சத்தத்துடன் அதிர்ந்தன. கூரையாக அடுக்கப்பட்டிருந்த சீமெந்தாலான பலகைகள் ஒன்றுடன் ஒன்று உரசி சிறுசிறு துகள்கள் புகையாக வெளிவந்தது.

என்ன என்று புரிவதற்குள்ளாக எல்லாமே சில செக்கன்களில் நிகழ்ந்துவிட்டன. அதன் பின்னர்தான் வந்தது பூகம்பம் என்றானது.

எல்லாம் நிகழ்ந்த பின்னர் தொழிலாளர்களிடையே சலசலப்பு. இதை ஒட்டி ஓய்வெடுக்கத் திட்டம்போட்ட சில குறுக்கு மூளைக்காரர்கள் மண்டபத்தைவிட்டு வெளியே ஓட, வேறு சிலர் தமது குடும்பத்தாருடன் தொடர்பு கொள்ளவென தொலைபேசியை நாட அவர்களை துரத்திப் பிடித்து மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்குள் மேற்பார்வையாளருக்கு போதும் போதுமென்றாகிவிட்டது.

எனக்குள் பலவித எண்ணங்கள்.

சுரங்க புகையிரதங்கள் ஓடுமா? அல்லது சேதமுற்றிருக்குமா? எவ்வாறு வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்புவது என்ற சிந்தனை.

நல்லவேளை தப்பிவிட்டோம் என்று நிம்மதி. சற்று பலமான பூகம்பமாக இருந்தால், அந்த கூரையிலுள்ள சீமெந்துப் பலகைகள் எம்மை தப்பவிட்டிருக்குமா? நிச்சயமாக இல்லை.

சிலர் நினைக்கலாம்— பூகம்பம் ஏற்படும்போது வெளியே ஓடலாம் என்று அது தவறு. பூமி அதிர்வினால் எமது சமநிலை பாதிக்கப்படும். அதனால், நாம் அவ்விடத்திலேயே விழ நேரிடலாமே தவிர, நிச்சயமாக ஓடித் தப்ப முடியாது.

அதிகாலை 6.00 மணிக்கு அவசர அவசரமாக நேரப் பதிவு கருவிக்குள் மட்டையை அமுக்கி.... உடைகளை மாற்றி, வீட்டிற்கு வந்தால் வீட்டிலும் அமளிதுமளிதான்.

அயலில் வசிக்கும் தமிழ்க் குடும்பங்கள் மாற்றி மாற்றி தொலைபேசித் தொடர்புகள்... விசாரிப்புகள்... அனுபவப் பரிமாற்றங்கள்... எல்லாமே நடந்து முடிந்திருந்தன.

அன்று முழுவதும் பஸ்ஸிலும் றெயினிலும் 'டாக்' உரையாடல்களிலும் பெரும்பாலானவை பூகம்பத்தைப் பற்றியவை

புருசி பொன்னம்மா: இந்தப் பாழாய்ப் போன பூகம்பத்தாலை எனக்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமே.... சிங்கப்பூர் மருமேன் அனுப்பின பத்து நைலெக்ஸ் சீலையள் மடிப்புக் குலைஞ்சு போச்சு.... இந்தியா மருமேன் அனுப்பின காஞ்சிபுரம் அப்பிடியே கசங்கிப் போச்சு... நான் ஒருக்காக் கட்டின சீலை மற்றத்தரம் கட்ட மாட்டன். அப்பிடி பாவிக்காமை மடிச்சு வைச்சதுகள் அம்பது அறுவதாலும் எல்லாம் கீழை விழுந்து குழம்பி.....



தான்.

நாலு கிலோ மீற்றர் சுற்றளவில், பத்துத் தடவைகள் பூமி அதிர்ந்திருக்கிறது. இந்த அதிர்வு நில மட்டத்திலிருந்து 25 கிலோ மீற்றர் (15 மைல்) ஆழத்தில் ஏற்பட்டிருக்கிறது. வட ஐரோப்பாவில் 236 வருடங்களிற்குப் பின்னர் ஏற்பட்ட இப் பூகம்பத்தினால் ஒல்லாந்து, ஜேர்மனி, பெல்ஜியம், லாக்ஸம்பேர்க் நாடுகளின் சில பகுதிகள் அதிர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த பூகம்பம் ஏற்பட்டவேளையில் பொன் நகரத்தில் 79 வயதான மூவதி ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

ஜேர்மனியின் கைன்ஸ்ரேக் நகரில் 21 பேர் காயமுற்றும், 4 பேர் மிகவும் மோசமான நிலையிலும் உள்ளனர். ஏறக்குறைய 150 கட்டிடங்கள் சேதமாகியுள்ளன.

ஜேர்மனியில் 100 மில்லியன் மார்க்



(இரவு குடிவெறியில் படுத்த கணவனிடம்.....)

மனைவி: ராத்திரி வீடெல்லாம் நடுங்கேக்கை உங்களை எழுப்பினன். ஏன் எழும்பேலை....?

கணவன்: கட்டில் ஆடினதுதான். நான் நினைச்சன் நீதான் பக்கத்திலை வந்து படுக்கிறாய் என்டு.

மனைவி: ....?! .....?!

www.padippakam.com

# சித்திரைச் செவ்வானம்

- மு.புலேந்திரன் -

சித்திரைச் செவ்வானம் சிவந்திருக்கும்போது
அந்தி ஆதவன் மறைந்திடும்போது— இளம்பிறையவள்
தன் தண்ணொளி வழங்க சித்திரைக் கன்னியவளின்
உடலைத் தழுவியதும் மாத்திரை ஏற்ற மயக்கத்தில்
பசுந் தரைதனில், மலர்த்தரைக் கம்பளத்தில் நித்திரை.
மன்றுத்திரைதனில் ஏறி விண்ணுலகத்தில் சஞ்சாரம்
விண்கடாகந்தனில் பொன்னிறத்தில் ஓர் ஓடம்
மின்னித் துள்ளிக்குதிக்கின்ற நட்சத்திர மீன்கள் —இளம்
தென்றலுக்கு அலையெழுப்பும் பலவர்ண மேகங்கள்
ஆகா! இத்தனை வண்ணக் காட்சிகளும்
இயற்கையவளின் ஜாலங்கள், இவ்வேளைதனில்
மனத்திரையில் எழும் கவிகள் எத்தனை? எத்தனை? —அத்தனையும்
அழியா முத்திரை, கண் மூடிய கணநேரந்தான்
விழித்திரையில் ஓர் —பனித்துளி
மனத்திரையில் ஓர் கவி உதயம்.

கிற்கு மேல் பாதிப்பு என சில பத்திரிகைகள் கூறுகின்றன. அத்துடன் பூகம்பத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு காப்புறுதிப் பணம் வழங்கப்பட மாட்டாதென்பதும் குறிப்பிடத்தக்கது.

கேலின் நகரிலுள்ள 13ம் நூற்றாண்டின் சான்றான புராதன கத்தோலிக்க தேவாலய கூரையிலிருந்து 400 கிலோ கிராம் எடையுள்ள கல்லொன்று விழுந்துள்ளது.

ஒல்லாந்தின் றொஅர்மொண்ட் நகரம் பலத்த சேதமடைந்ததோடு, பல சரித்திர காலக் கட்டிடங்கள் முற்றாக அழிந்துள்ளன.

பல இடங்களில் தொலைபேசித் தொடர்புகள், மின் இணைப்புகள், கழிநீர்க் கால்வாய்கள், மோட்டார் வண்டிகள் போன்றவைகளும் சேதமாகியுள்ளன.

கடந்த முப்பது ஆண்டு காலத்தில் உலகில் ஏற்பட்ட பூகம்பங்களில் இது ஆறாவது ஆகும். 1960 மாசி மொறோக்கோவில் 12,000 மக்களும், 1980 கார்த்திகை இத்தாலியில் 4,800 மக்களும், 1985 புரட்டாசி மெக்சிக்கோவில் 9,500 மக்களும், 1988 அர்மீனியாவில் 25,000 மக்களும், 1992 பங்குனி துருக்கியில் 800 மக்களும் பூகம்பத்தினால் உயிரிழந்துள்ளனர். ●



படிப்பகம்

www.padippakam.com

# சந்திப்பு

சோழியான்

வேலை கிடைத்துவிட்டது!

எத்தனையோ இடம் ஏறி இறங்கி, ஐயா, பையா போட்டு, போலி மரியாதை காட்டி, விண்ணப்பப் பத்திரம் நிரப்பும்போது ஊரில் செய்த உத்தியோகத்தை மறைத்து, ஊரிலும் கூலி வேலைதான் செய்தனான் என்று முதலாளிக்குக் கூறி:... ஒரு மாதிரியாய் வேலை கிடைத்துவிட்டது சுகுமாருக்கு.

சீனா றெஸ்ரோரண்டில் வேலை. நானூறு மார்க்குக்குத்தான் பேப்பர் பதிய முடியும் என்றவனை, கெஞ்சி மன்றாடி எண்ணூறு மார்க்குக்கு பேப்பர் பதிந்தாயிற்று. மிகுதி நானூறு கையில். 'போதுமென்ற மனமே பொன் செய்யும். இப்போதைக்கு இது போதும்...'

என்ன இருந்தாலும் கிழமையிலை ஒரு நாள்தான் லீவு. இதுதான் சுகுமாருக்கு எரிச்சலைத் தந்தது. எனினும் மற்றைய நாட்களில் இலவசமாய்ச் சாப்பிடலாம். அதுவும் வெள்ளை அரிசிச் சோறுடன்.

"முகம் கொஞ்சம் வெளிச்சுப் போச்சு. வேலை கிடைச்ச சந்தோசமாக்கும்..." என்று கேட்டான் யோசேப்.

"ஒரு மாதிரி சீனாக்காறனிட்டைக் தொத்திப் போட்டாய். எனக்கும் எதாலும் இருந்தால் சொல்லு..." என்று ஆதரவு கோரினான் சந்திரன்.

" என்னடா பெரிய வேலை...கோப்பை கழுவுறதுதானே..."

"எப்பவும் படிப்படியாய்த்தான் முன்னேற வேணும். முதலிலை கோப்பை கழுவிறதையும் ஒழுங்காய் செய்து பழகு. பேந்து கொஞ்சங் கொஞ்சமாய் சம்பளத்தைக் கூட்டிக் கேக்கலாம்"— யோசேப்.

சுகுமார் வேலைக்குச் சென்று சில மாதங்கள் உருண்டோடிவிட்டன. பிரதான சமையல்காரனுக்கு 'டொச்' தெரியாது. 'யா... நைன்...' போன்ற ஒரு சில சொற்களைத் தவிர. ஆங்கில அறிவும் பூச்சியம். வயது முப்ப



படிப்பகம்

து மட்டில்தான். ஆனால் பழகுவதற்கு நல்லவன்.

இந்த சில மாதங்களில் நெருங்கிய நண்பனாகிவிட்டான். 'செவ் குக்' என்ற பெருமையில்லை.

ஹொங்கொங்கிலிருந்து வேலைக்காக ஜேர்மனிக்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேல். மனைவி, பிள்ளைகள் ஹொங்கொங்கில். இந்த இரண்டு வருடங்களில் ஒரேயொரு தடவைதான் மனைவி பிள்ளைகளைப் போய்ப் பார்த்திருக்கிறான். சம்பளம் நாலாயிரம் மார்க்குக்கு மேல் கையில்.

சுகுமாருக்கு வியப்பாக இருந்தது.

கை நிறைய சம்பளம்... போய் வர வசதி, எனினும் இந்த இரண்டு வருடத்தில் ஒரேயொரு முறைதான் தனது நாட்டிற்குப் போய் வந்திருக்கிறான்.

நான் என்றால்... இப்படி இருந்தால் எத்தனை தரம் போய் வந்திருப்பன்....

பெருமூச்சுவிட்டான் சுகுமார்.

"ஹொங்கொங்கிலை புத்தரைத்தானே கும்பிறனிங்கள்?"

கேள்விப்பட்டதைக் கேட்டு வைத்தான். அந்த மஞ்சள் நிற, முக முடி இல்லாத சமையல்காரன் சிரித்தான்.

"கடவுள், சமயம் எல்லாம் முப்பது நாப்பது வருடத்துக்கு முந்தி. இப்ப நாங்கள் கும்பிறதில்ல. இதிலெல்லாம் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எவராவது ஒரு சிலர் இதுக்கு விதிவிலக்கு. வாழ்க்கைக்கு கடவுள் முக்கியமில்லை. உழைப்பு... உழைப்பு... உழைப்பு... அதுதான் வேணும்"

அவனுடன் இதற்கு மேல் கதைக்க முடியாது. அவனுக்கு 'டொச' சரியாக விளங்காது. எனக்கு சீனா தெரியாது ஏதோ யக்கோ... வொங்கோ.... என்று ஒன்று இரண்டு எண்ணப் பழகியாச்சு. சௌ சன் என்று வணக்கம் கூறத் தெரிஞ்சாச்சு...

சீனா றெஸ்ரோரண்ட் வேலைக்கு சீன மொழியில் அரைகுறை... ஜேர்மன் நாட்டில் வாழ டொச்சில் அரைகுறை... நாளைக்கு பிரான்ஸ், சுவிஸ் என ஓட வேண்டிய தேவையில் அந்த மொழிகளிலும் மேலாலை கொஞ்சம்.

ஆனால் ஒரு நாளைக்கு இலங்கைக்கு போக வேண்டி வந்தால்... சிங்களம்தான் எதுவும் தெரியாது... அதிலேயும் நுனிப் புல் மேய்ந்த மாதிரி சிலதை தெரிந்து வைத்திருக்க ஏன் தோன்றவில்லை....?

எங்களுடைய தலைவர்கள் எமக்கூட்டிய மொழித் துவேசம்தான் காரணமோ?! மனதில் அரித்தது. யோசேப்பிடம் அரிச்சலைக் கொட்டியபோது

"உண்மைதான் சுகுமார்! நாங்கள் போற இடத்து மொழியைக் கற்க வேணும் என்ட விருப்பம், சிங்கள மொழியைக் கற்க வேணும் என்டதிலை இல்லாததுக்குக் காரணம் எங்களை வழி நடத்தினவர்களின்ரை குறைபாடுதான். எங்கடை தலைவர்கள் பாராளுமன்றத்திலை ஆங்கிலத்திலைதான் பேசுவோம்... சிங்களத்திலை பேச மாட்டோம் என்டு வாய்ச் சவுடால் விட்டபோது, நாங்களும் புரிஞ்சு 'கொள்ளாமை சந்தோசப்பட்டம்.

www.padippakam.com

என்னமாதிரி எங்கடை தலைவர் ஆங்கிலத்திலை விளாசித் தள்ளினார்; அவரை போலை வேறை ஆராலை இப்பிடிப் பேச ஏலும் என்று பெருமைப்பட்டோமே தவிர, சிங்களத்தைப் படிக்க வேணும் என்று எங்களிலை எத்தனை பேர் விருப்பப் பட்டிச்சினம்".

சுகுமார் கைகளைப் பார்த்தான். கோப்பை கழுவிக் கழுவி, தண்ணியில் கைகளெல்லாம் பொருக்கு வெடித்திருந்தது. முதல் வேலையாய் ஒரு கிறீம் டப்பி வாங்கி பூச வேணும்.

தினமும் பத்து மணித்தியாலங்களாய் கோப்பை கழுவி, தண்ணியில் கை ஊறி, உக்கி விடுமோ? விரல்களை கழற்ற வேண்டி வருமோ?! பயமாக இருந்தது.

என்றாலும் இப்படி வேலை இல்லாமல் எத்தனை நாளுக்கு சோசல் காசில் சோம்பல் பிடிச்சு....?!

சாப்பிடுறதும் படுக்கிறதுமாய்.... பொழுது போகாமல் மனதில் கண்ட கண்ட ஆசைகளெல்லாம் உருவாகுது. வேலைக்கு போனாலாவது மனதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த முடியும்...

யோசேப்புக்கு றெஸ்ரோரண்ட் வேலையிலை நாட்டமில்லை. எப்படியாவது பக்ரறி ஒன்றில் வேலை எடுக்க வேண்டும் என்று ஓடித் திரிகிறான். ஏறி இறங்காத இடம் இல்லை. எட்டு மணித்தியால வேலை: இரண்டு நாள் லீவு. இதுதான் அவனுடைய தேவை.

சந்திரனைப்பற்றி என்ன... பாவம் ...சின்னப் பொடியன்... குடும்ப பாரம். சில வேளைகளில் தோட்ட வேலை. சிலவேளை ஊரிலிருந்து கடிதத்தைக் காணாத யோசனை...... யார் என்ன சொன்னாலும் வளைஞ்சு போற இயல்பு.

பக்கத்து அறையில் வசிக்கும் லிங்கம் பியர், சிகரட் வாங்குவதற்கு நேர காலம் இல்லாமல் சந்திரனைத்தான் ஏவுவான். சந்திரனும் மறுப்பதில்லை.

'ஒரு நாள் ரண்டு நாள் என்றால் பறவாயில்லை. எந்த நாளும் இப்படி செய்யாதே' என்று சந்திரனுக்குக் கூறியவையும் எல்லாம் புறக் குடத்து நீர்தான்.

'எதுவும் பட்டால்தான் தெரியும்' என்று இருந்துவிட்டான் சுகுமார்.

ஆனால்... அது கெதியிலேயே பட்டது.

அன்று இரவு வேலையால் சுகுமார் வந்தபோது முகட்டை வெறித்தபடி, கண்கள் வீங்க உட்கார்ந்திருந்தான் சந்திரன். யோசேப்பை காணவில்லை.

கண்களில் அழுததற்கான அடையாளம்.

எந்நேரமும் கலகலப்பாக திரியும் சந்திரனுக்கு என்ன நடந்தது?!

(தொடரும்)

ஓராண்டு நிறைவை ஒட்டி வெளியாகும் சிறுகதை- கவிதைத் தொகுப்பு ஆனி மாதம் வெளிவரும்....



படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் கற்பித்தல்

கடந்த இதழில் நாம் குறிப்பிட்டது போல இன்று பரவலாகப் பேசப்படும் விடயத்தில் தாய்மொழிக் கல்வியும் ஒன்றாகும். தாய்மொழிக் கல்வி என்னும் போது மொழியும் கலையும் இதில் அடங்குகின்றன.

தாய்மொழிக் கல்வியைப் பொறுத்த வரையில் பெற்றோரும் மற்றோரும் இதில் பெருந் தவறுகளைச் செய்து வருகின்றார்கள் என்ற பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. பெற்றோரைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு மொழியைப் படித்தால் சரி! அந்த ஏதோ ஒரு மொழியும் இங்கு தொடர்ந்திருக்கக் கூடிய மொழியாகி விட்டால் சரி என்ற எண்ணமே பெரும்பாலான பெற்றோர் மத்தியில் நிலவுகின்றது.

இத்தகைய பெற்றோர்கள் தங்களுடைய வசதிகள் வாய்ப்புக்களுக்காகத் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாழடித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணராமல் இருக்கின்றார்கள். ''இங்கு தமிழ்ப் பள்ளிக்கூடம் இல்லையா?'' என்று கேட்டதற்கு ''இப்ப இரண்டு வருட விசா தருகின்றார்கள். தமிழ்ப் பள்ளிக்கூடம் தேவையில்லை'' என்று சொன்ன பெற்றோர்களையும் நாம் சந்தித்துள்ளோம். அதே நேரம் ஒரு மாத விசா கொடுத்த போது களான்கள் போல பல தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் முளை விட்டதையும் சொன்னவர்கள் இருக்கின்றார்கள்.

இப்படியென்றால் தமிழர்கள் தமது தாய் மொழியை எந்த நிலையில் வைத்திருக்கின்றார்கள் என்பதில் யோசிக்க வேண்டியதே இல்லை. ஏதோ இயக்கத்திற்கு இருபதோ முப்பதோ கொடுத்து விட்டால் சரி! நாமும் விடுதலைப் போராட்டத்தில் பங்களிக்கின்றோம். நாமும் தமிழராக இருக்கின்றோம்! என்று மார் தட்டிக் கொள்ளும் மறவர்களாக இருக்கின்றார்கள்!

எமது நாட்டின் பிரச்சினையையே விளங்கிக்



படிப்பகம்

கொள்ளாமல், மாற்றான் செய்ய நினைத்ததை நாமே செய்து கொண்டு மார் தட்டுவதில் என்ன பெருமை? நாமே எமது பிள்ளைகளுக்குத் தமிழைக் காட்டாமல், தமிழே தெரியாத எதிர்கால சந்ததிகளை நாமே உருவாக்கிக் கொண்டு ... மார்தட்டிக் கொள்வது எதற்காக?? எமது நாட்டின் பிரச்சினை மொழியை அடிப்படையாகக் கொண்டது. நாமே எமது தாய்மொழியை எம்மிடமிருந்து விலக்கிக் கொள்வது ''எதிரிக்குச் சலாம் போடுகின்ற ஈனத்தனத்திற்கு ஈடானதல்லவா''??

பெற்றோர்களின் நிலை இப்படியிருக்கக் கற்றோர் என்று தம்மைத் தாமே விளம்பரம் செய்து கொள்ளும் மற்றோர் ஒருவகையில் ''வீடு கொழுத்துகிற ராசாவுக்கு நெருப்பெடுக்கிற மந்திரியாக'' இருக்கின்றார்கள். பெற்றோரில் பலர் தாய்மொழியை ஒதுக்க இவர்களும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. இங்கு இன்னமும் ''சட்டாம்பித்தனம்'' காட்டுகின்ற பலராலே பள்ளிக்கூடம் பல மூடப்பட்டதாக அறிய முடிகின்றது. அன்னியமொழியை ஆனந்தமாகப் படிக்கின்ற வேளையில் தாய்மொழியைத் தடி கொண்டடித்துப் படிப்பிப்பது தாய்மொழியில் வெறுப்பை ஏற்படுத்தவா?


நடனவகுப்புகளில் ரீச்சரிடம் காய்மிதி வாங்கி மனமுடைந்து வகுப்புக்களுக்குப் போகாமல் வெறுப்படைந்த குழந்தைகள் ஏராளம் ஏராளம்! இங்கு பிள்ளைகள் உங்களுடைய சட்டாம்பித்தனங்களுக்கு ஏற்றதாகவா வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்?? என்பதை இந்தக் கற்றோரால் தெரிந்துகொள்ள முடியாதிருப்பது எங்களால் புரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது.

இங்குள்ள சூழலும் வாழ்க்கை முறைகளும் எழுத்து வடிவங்களும் கற்பித்தலும் வேறாக இருக்கும் போது... நாம் எமது சட்டாம்பித்தனங்களைக் காட்டி என்ன சாதிக்க முடியும்?? இங்குள்ள பல பாடசாலைகளில் பொதுப் பரீட்சையே காணாத பலர் ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் பவனி வருவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இன்னொரு புறம் தாங்கள் தான் படித்தவர்கள் எனக் காலத்திற்கே உதவாத கயமைகளுடன் கர்ச்சிப்போர்! இவையெல்லாம் தமிழுக்குத் தேவைதானா இல்லை தமிழருக்குத் தேவைதானா?? சம்பந்தப்பட்டவர்கள் பதிலளிப்பார்களா??

'கடலை ஆசிரியர் குழு''

www.padippakam.com

அட்டைப்பட விளக்கம்




கருத்து :- எஸ்ஸார்

www.padippakam.com

இது ஒரு இலவச மாதாந்த வெளியீடு. தபாற் செலவாக 6x60 பெனிக் முத்திரைகளை அனுப்பி ஆறு மாத வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இச் சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களின் கருத்துக்கள் ஆக்கதாரர்களின் கருத்தாகும்.

புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்

ஆக்கதாரர்,வாசகர்,யாவரும் கடல் பற்றிய

தொடர்புகளுக்கு

"KADAL",

POSTFACH-1425,

4018 LANGENFELD.

---

Die Erstellung dieses Heftes wurde durch das Diakonische Werk des Evang. Kirchenkreises Leverkusen ermöglicht.

படிப்பகம்